அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

"திருஅருட்பா வரலாறு" -

சன்மார்க்க சங்கச் சாதுக்களின் வேண்டுகோளின் படி

வள்ளற் பெருமானின் முதல் மாணாக்கர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டு

"திருவருட்பிரகாச வள்ளற்பெருமானின்" ஒப்புதலின் படி

திருஅருட்பா முதல் பதிப்பில் பதிப்பிக்கப்பட்டது "

விளக்க உரை: அருள்திரு. சீனி. சட்டையப்பனார் - வடலூர்.

வெளியீடு :

வள்ளலார் இளைஞர் மன்றம் - கோட்டக்கரை - வடலூர்

வள்ளலார் பெருவெளி இணையதளக் குழுவினர் - நியூ ஜெர்சி - அமெரிக்கா

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒருகோட்டுச் சிவகளிற்றை உம்பர்சிறை ஒழித்தொளிர் வைஞ்ஞாங்கர் ஏந்தித்
திருகோட்டு நம்பியைஆ ளுடையானை உயடையாளைச் செல்வக் காழி
வருகோட்டு மாமருந்தை வாகீச அமுதைவன் தொண்ட வாழ்வை
மருகோட்டு வயல்வாத வூரரசைத் தண்டிதனை வழுத்தல் செய்வாம். (1)

உரை:

அருள் ஆற்றல் என்னும் ஒற்றைக் கொம்பினை உடைய சிவ கணபதியை, வான நாட்டவரின் சிறைவாசத்தை ஒழித்தது அருள்ஒளி வீசும் மெய்ஞ்ஞான வேலினைத் திருக்கரத்தில் ஏந்தித் திருத்தணிகை மலையில் வீற்றிருக்கும் சிவசண்முகச்சிவதேசிகனை, உயிர் குலங்களை எல்லாம் ஆட்கொண்டு அருள் பாலிக்கும் சிவ பரம்பொருளை, எல்லா உயிர்களையும்இன்புறச் செயல்படும் சிவ சக்தியை, அருட்செல்வம் கொழிக்கும் சீர்காழியில் அவதரித்த அருள் மாமலையாகி மெய்ஞானமருந்தாகும் திருஞானசம்பந்தச் சற்குருவை, சொல்லுக்கு இறைவராகிய அருள் அமுதமாய்த் திகழும் திருநாவுக்கரசரை, வன்தொண்டர் என அருட்பெயரைத் தரித்துநட்புரிமையை விளக்கும் அருள் வாழ்வினராம் சுந்தர மூர்த்தியை, மலம் மாயைகளை ஓட்டுகின்ற ஆற்றலும், சிவகதி என்னும்பயிரை விளைவிக்கும் வல்லபமும் உடைய அருள் வயல்களைச் சூழ்ந்தத் திருவாத வூரராம் மாணிக்க வாசக மன்னரை, அறப்பயன்களையும் வழிபாட்டுப் பயன்களையும் நல்கி அருளும் சண்டேச்சுரனை நாம் நாளும் போற்றிப் புகழ்ந்திடும் செயலைமேற்கொள்வோம்.

குரு தோத்திரம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

சோமசிங் காரநாம! தூயசந் தோடநம!
சூழுறும் வேதமுடி சூடரும் பாதநம!
காமசங் காரநம! காதலன் பாருமவர்
காதலின் காறுமமர் காசினன் பாதநம!
நாமமங் கோதினர்கள் நாசமின் றாகியுப
நாடரும் வீடுதரு ஞானசெம் பாதநம!
ராமிபங் காளநம! நானுயும் வாறுவரு
இராமலிங் காயநம! இராமலிங் காயநம! (1)

உரை:

இளம் பிறையைச் சூடிய எழிற்கடவுளே போற்றி ; தூய பேரின்பத்தை வழங்கி அருட்பவரே போற்றி; சுத்த வேதாந்தந்தின்முடியில் பொருந்துவதற்கு அரிதாகிய அருள்வெளி, அருள் ஒளி என்னும் திருவடிகளை உடையவரே போற்றி; காம வெகுளிமயக்கங்களை ஆன்மாவிலிருந்தும் முற்றிலும் அகற்றுபவரே போற்றி; அடிமை நேயம், மகன்மை நேயம், நண்பினர் நேயம், எவ்வுயிரும் தம் உயிராகப் பாராட்டும் சன்மார்க்க நேயம், பழகுகின்றவர்க்குப் பழகுகின்ற அளவு அருள் ஒளி, வழங்கும்செவ்விய திருவடிகளை உடையவரே போற்றி ;

இராமலிங்காய நம என்னும் அருட்பெயரை இடையறாது ஓதிவருகின்றவர்களுக்கு என்றும் அழியாத மேலான மோட்ச இன்பப்பேற்றினைத் தந்தருளுகின்ற செவ்விய மெய்ஞானத் திருவடிகளை உடையவரே போற்றி; அருட்சக்தியை ஒரு பாகமாகக்கொண்டவரே போற்றி;
ஏழை எளியவனும் ஆகிய யானும் மேம்படுமாறு அருள் வழங்க முந்துகின்ற இராமலிங்கரே போற்றி! இராமலிங்கரே போற்றி!

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை

பகாநலம் வதமாறு சுகோதயம் பாதிதமில்

நிராமயங் காரகம திலாதசஞ் சீவிதநல்

நிராசைகொண் டாருடைய நிகேதனஞ் சூதமுறல்

வராதஇன் பாரவெனை முனாளில்வந் தேயருளி

மகாபலஞ் சேரவருள் விராவுசெம் பாதநம!

இராமலிந் தார்மனதின் இராதசந் தோடநம!

*இராமலிங் காயநம! இராமலிங் காயநம! (2)

*இராமல் - இங்கு - ஆய - நம என்று பிரித்துப் பொருள் கொள்க.

உரை:

எல்லாம் வல்ல இராமலிங்கராம் இறைவனின் திருவடிகள் பரசிவ நிலையிலும் மேலாயப் பராபரம் என்னும் தகுதிப்பட்டினைஉடையது, மனமாயை முதலியவைகள் முற்றிலும் அகன்ற சுத்த அன்மாக்களால் இடையறாது சூழப்பட்டது தற்போதம், ஆணவம் என்னும் இருள் நிலைப் பேறுகளால் சிறிதும் தெரிந்திட இயலாத தூய அருள் நலமே வடிவானது, பிறவிப் பிணிகள், மாயை நிலைகள் முற்றிலும் அற்றுப்போன பேரின்பத்தை உடையது. இம்மி அளவும் அலைவிலாத உத்தம ஆன்ம வடிவானது, ஏக தேசத்திலும் இருள் நிலை சிறிதும் இல்லாத சிரஞ்சீவியான ஆன்மத் தன்மை உடையது.

பற்றற்ற தூய சீலர்களுக்குரிய வாழ்விடமானது. இருள் சூழ்ந்திடுதல் இல்லாத மேலான இன்பத்தைப் பெற்றுக்கொள்ளஎன்னிடம் இளம்பிராயத்தில் எழுந்தருளி ஐந்தொழில் கர்த்தர்களும் அறிய ஒண்ணாத ஞான வலியினை எளியேன் அடையும்படி கருணை பாலித்தது. அத்தகைய செவ்விய சீர்மைகளைக் கொண்ட திருவடிகளை உடையவரே போற்றி ! வினை, மதம், மலம், மாயை முதலான இருள் நிலைகள் நிறைந்தவரின் மனத்தகத்தே விளங்காத பேரின்பசீலரே போற்றி! விண்ணுலக இன்பத்தைமண்ணுலகினரும் அடையத் திருவடிவு கொண்டு இங்கு எழுந்தருளிய இராமலிங்கரே போற்றி ! ஆன்மாக்களின் பஞ்சமாபாதகங்களையும் அகற்றி அருள் பாலிக்கும் இராமலிங்கரே போற்றி !

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அவை அடக்கம்

சொல்லத் துணிந்துவிட்டேன்

தன்நிகரும் பெருங்கருணை அருட்பிரகா சப்பெருமான் சந்நி தானம்
மன்அருளை விழைஅன்பர் சிலர்அருட்பா வரலாறும் மற்றும் ஈண்டிந்
நன்னிதிதான் வெளிவந்த வாருஉரைக் குதிஎன்ன நகைநா ணாதிங்
கென்அறியா மையைவிரிப்பேன் இயைந்தனன்உய் வுண்டாஎன் இச்சையாலே . (1)

உரை:

தனக்குத் தானே இணையானவர் தனிப்பெருங்கருணை வள்ளலாகிய திருவருட்பிரகாசர். அவ்வள்ளற் பெருமானின் தெய்வத் திருச்சமூகத்தில் நிலைபேறுடைய பேரருளை அடைய விரும்பினர் சில அன்பர்கள். அத்தகைய அன்பர்கள் "திருவருட்பாவின் சரித்திரத்தினையும், மேலாம் அருட் கருவூலமாகிய திருவருட்பா வெளிவந்தநடைமுறைகளையும் வெளிபடுத்திட வேண்டும் , ஆதலின் அதுபற்றி உரைத்திடுக" என்று தெரிவித்திடார்கள்,

அதற்கு உடன்பட்டு ஆன்றோரும், சான்றோரும் சூழ்ந்தச் சன்மார்க்க சங்கத்தினரின் சிரிப்புக்கு ஆளானேன் ; மேலும் நான்வெட்கப்படாதவனும் ஆனேன், அத்துடன் அன்றி இவ்விடத்து என் அறியாமையை விளக்குவதற்கும் விரும்பிவிட்டேன். அப்படியாகிலும் எனக்கு மேம்பாடு கிடைக்கும் என்ற நல்விருப்பத்தாலே திருவருட்பா வரலாற்றைச் சொல்லத்துணிந்துவிட்டேன்.

நூல்

சோழநாடு

(சோழ நாட்டின் பெருமை )

மணிகொழிக்குங் கல்லோல மாக்கடலை முகந்துண்டு
பிணிதவிர்க்கத் தலைப்பெயலும் பெய்யாத காலத்தும்
தணிவில்வளந் தருபொன்னித் தடம்புனல்சூழ்ந் தகன்கடைவாய்
மணிமுழக்கங் கேட்டறியா வளநாடு சோணாட்டில். (1)

உரை:

நவமணிகளைக் கரையில் ஒதுக்குவது கடல், அதன் தன்மையோ ஓலமிட்ட படியே இருப்பது. அதன் நீரினை வாரி உண்டு, வானமண்டலத்து எழுவன முகில்கள்; அம்முகிற் கூட்டங்கள் மழை பொழிவதால், பலவகைப்பிணிகள் நீங்குகின்றன; அம்முகில்கள்மழை பொழியத் தவறிய காலத்திலும் கூடக் குறையாத வளத்தினைத் தருவது பொன்னி ஆறு!

அப்பொன்னி ஆற்றினால் நீர்வளம், நிலவளம், குடிவளம் நிறைந்தது சோழவள நாடு. அந்த நாடோ குடிகளின் குறைகளைக்கேட்டு நீதி வழங்கும் ஆராய்ச்சி மணியினது ஓசையைக் கேளாத பெருமை வாய்ந்தது. அந்நாட்டின் ஒரு பகுதியே தில்லையம்பதி.

திருத்தில்லை

(அருட்பொதுவின் அருமை)

நீர்பூத்தப் பிறைக்கொழுந்து நின்றவிர்செஞ் சடைக்காட்டின்
ஏர்பூத்த பவளமலை இமையம் அருள் பசுங்கொடியும்
நார்பூத்த பன்னகமும் அடுபுலியும் நலன் ஓங்கச்
சீர்பூத்த பொதுவுஉடைய திருத்தியலைப் பதிஒருசார். (2)

உரை:

குளிர்ச்சியே நிறைந்த இளம்பிறை, செஞ்சடைக் காட்டில் விளங்குகின்றது, அச்செஞ்சடைக் காட்டினை முடியில் தாங்கி அழகுஒளிரும் பவள மலையாய் ஓங்கி நிற்பவர் தில்லை அம்பலவர், அவருடன் விளங்குபவர் அருட்பசுங் கொடியாம் சிவகாமவள்ளி, அவ்வம்மை அப்பரால் அருள் நலம் ஓங்கப் பெற்றவர்கள் பதஞ்சலியும் புலிக்கால் முனிவரும், அத்தகைய திருவருட் சீர்மைமலர்ந்திருக்கும் இடமே தில்லை அருட்பொதுவாம் சிதம்பரம்.

தெய்வ மருதூர்

(தெய்வ மருதூரின் சீர்மை)

ஐந்திணைசேர் அகத்தமிழின் துறைநுகர்ந்து புறத்துறையின்
வந்தபொருள் அவைகொண்டு செய்வனசெய் மாண்பினவாம்
நந்தல்இலா ஆக்கத்து நாற்குடியும் தழைத்தோங்கும்
கொந்தவிழ்ப்பூந் தண்மருதக் குலமருதூரா மருதூர். (3)

உரை:

அத்தில்லையம் பதியின் அணித்தாய் ஒரு பக்கத்தே திகழ்வது தெய்வத் திருமருதூர். அவ்வூர் மருதநிலத்திலேயே தலைசிறந்தகுல மருதூர் எனப்படும் மேன்மையினை உடையது, அவ்வூரினர் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும்அன்பின் வழித்தாயத் தமிழின் அகப்பொருள் இன்பங்களைத் துய்ப்பவர்கள்.

மேலும் தமிழின் புறப்பொருள் துறைகள் வகுத்தபடி நல்வழியில் ஈட்டிய பொருள் செல்வமும் உடையவர்கள். அப்பொருளினைக் கொண்டு செய்யத்தக்க நற்செயல்களைச் செய்யும் மாண்பினையும் உடையவர்கள். அத்துடன் எக்காலத்தும் குறைவில்லாத ஆக்கத்தினையும் பெற்றவர்கள், மற்றும் அரசியல், கலையியல், வணிகவியல்உழவியல் என்னும் நால்வகைக் குடிமை இயல்புகளாலும் தழைத்து மேம்பட்டவர்கள்.

பெற்றோர்

(இல்லறத்தோர் இனிமை)

இராமையன் மருவாமை இராமைய னிராமையன்
அராமுடிப்பூ மணந்தபுகழ் அருங்கருணீ கக்குலத்தோன்
பராவுவட மீன்கற்பிற் சின்னம்மை சின்னம்மைப்
பொராவண்ணந் துணைகொண்டு பொதுநீக்கி அறம்புரந்தான். (4)

உரை:

திருமருதூரில் இராமையா என்னும் ஆன்றோர் ஒருவர் இருந்தார். அவரோ இராமபிரானே எனப் போற்றத் தக்கவர். இருள்என்னும் அறியாமையும், மருள் என்னும் மயக்கமும் சேரப்பெறாதவர். பூமண்டலம் புகழத்தக்க கருணீகர் குலவிளக்காயத்திகழ்ந்தவர்.

அவர்தம் ஒப்பற்ற மனைவியே ஞானாம்பாள் எனத்தகும் சின்னம்மை. அவரோ வணங்குதற்குரிய வடமீனாகிய அருந்ததி போன்று கற்புடைமை பூண்டவர். அத்தகைய கற்பின் கொழுந்துடன் இணைந்து இல்லற நெறிகளை இனிதே போற்றி வந்தார் இராமையா. அதுவும் அவ்வில்லறநெறிகளுக்குத் தாமே தலைமையாளர் என்னும் படி வாழ்ந்து வந்தார்.

(கைலை மலை என வாழ்ந்தனர்)

தூய்மையால் உயர்தவத்தால் துருவம்உறீஇ இருத்தலினான்
வாய்மையால் வடகைலை எனஓங்கி வாழ்நாளில்
சேய்மையாத் தனைப்பிரிந்திங் கெமைத்தெரியாச் சிறியோமை
நோய்மைஓ வுறவண்மை இன்பத்து நுழைவிப்பான். (5)

உரை:

முன்பு துன்மார்க்கத்தில் பழகினோம், அதனால் கடவுள் சமூகத்தை விட்டுப் பிரிந்தோம். அத்துடன் பல பிறவிகளை அடைந்துஅல்லல் உற்றோம், அத்தகைய சிறுமை வாய்ந்த நமது பிறவித் தளைகள் ஓய்ந்திட வேண்டும், மேலும் நம்மை எல்லாம் பேரின்ப பெருவாழ்வில் சேர்த்திடவும் வேண்டும்.

அதன் காரணமாக இல்லறத்தால் ஓங்கிய தவ நெறி; உள்ளும் புறமும் ஒத்து வாழ்ந்திருக்கும் புனித நிலை; அதனால் துருவநட்சத்திரம் போன்ற நிலைபெற்ற புகழுடன் விளங்கும் மாட்சிமை; இப்படிச் சின்னம்மையும், இராமையாவும் மனத்தொருவாய்மை மொழிந்து வாழ்ந்தனர், அதனால் கைலை மலை போல் புண்ணியம் நிறைந்து விளங்கும் காலம் சூழ்ந்தது.

அவதார நோக்கம்

(அவதார காலம் நெருங்கியது)

மறைவிளங்க ஆகமவாய் மைகள்விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையுந் தென்தமிழுந் துணிபொருளின்
நிறைவிளங்க நீடுயிர்கள் நெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்க பொய்புகுதா தேழையோம் புலம்விளங்க. (6)

உரை:

வேத நெறி ஆகமநெறி உண்மைகள் விளங்கிட வேண்டும், அதன் முடிவான அன்பு நெறியாம் சிவநெறி விளங்கிட வேண்டும், அதன் வழி தாய் மொழியாம் ஆரியமும், தந்தை மொழியாம் தமிழும் உறுதி எனத் துணிந்த அருளின் நிறை நிலையம் இதுவேஎனத் தெளிதல் வேண்டும்.

நீளும் உயித்தொகுதிகளின் காருண்யா நெறியும் விளங்குதல் வேண்டும், அதன் வழி அருட்பெரு நிலை தழைத்திடவும்வேண்டும், அத்துடன் பல்வகைச் சமய, மத இன வேற்றுமைகள் இடையே சகித்தல் பண்பும் ஓங்குதல் வேண்டும், ஆதலின்ஆருயிர்கள் பொய் நெறிப் புகுந்திடாமல் மெய்நெறிப் புகுதல் வேண்டும், அதன் காரணமாக அருட்கதிரவன் ஒன்று அவதாரம்செய்யக் கூடிய காலம் நெருங்கிக் கொண்டிருந்தது.

(கருணை வெள்ளம் பெருகுகின்றது )

விடையுகைக்குந் தான்தோன்றி விரித்துக்காட் டியாமெய்மை
நடையுகக்கக் காட்டியுங்கா ணார்காண நாலாம்பொய்க்
கடையுகத்திற் கண்கூடாய் நிலைகாட்டப் பெருங்கருணை
மடையுடைந்து மயற்கட்டின் மயங்காமே வெளிகாட்டி. (7)

உரை:

தயவின் அடையாளாமாக விளங்குவது எருது, அதன் மீது ஊர்ந்து அருள்பவர் சுயம்புவாகிய ஆண்டவர், அவரால்வெளிப்பட்டதே சத்திய நெறி என்னும் சன்மார்க்கம், அச்சன்மார்க்க நெறிகளைக் கடைப்பிடித்து உய்யுங்கள் என்று அருளிய அருட்குறிப்பினைப் பின்பற்றாதவர்களாய் ஆனோம், அப்படிப் பின்பற்றாதவர்களாய் ஆனா நாம் அனைவரும் காணும்படி ஓர் அற்புதம் நிகழ்ந்திடும் காலம் உருவாயிற்று.

நான்காவது பொய்யுகமே கலியுகம், அக்கலியுகத்திலும் கூடக் கடவுள் தானாகி விளங்கும் ஒரு நிகழ்வு நிகழ்ந்திடலாயிற்று. அப்படிப்பட்ட ஒப்பற்றப் பேற்றினை அனைவரும் கண் கூடாகக் கண்டிடும் காலம் உருவாயிற்று.

அதன் காரணமாக அருட்பிரகாசப் பெருமானின் தனிப்பெருங்கருணை வெள்ளம் பெருக்கெடுத்தது. அவ்வெள்ளமோ உயிர்குலத்தின் ஆசாரச் சங்கற்ப விகற்பத் தடைகளை உடைத்து எரிந்தது, மேலும் அந்த வெள்ளமே மாயை முதலிய கானகத்தில்உயிர்குலங்கள் அகப்பட்டுத் தகைக்காமல் அடித்துச் சென்றது. பேரின்பச் சுகம் அடையும்படி உயிர் தொகுதியை அவ்வெள்ளம் கரை சேர்த்தது.

(திருவுளம் கொண்டிடுதல்)

அறங்காட்டுந் துறைகாட்டி அறுசமயத் தவரவர்க்குத்
திறங்கட்டிச் சிவங்காட்டிச் சித்திமுத்தித் திருக்காட்டிப்
புறங்காட்டிற் பொய்யுடலை வையாமெய்ப் புலங்காட்டி
மறங்காட்டேன் மனக்காட்டை வளராமே மதிகாட்ட. (8)

உரை:

அறங்கள் முப்பத்திரெண்டு ஆகும், அவற்றுள் தலைமையான அறம் அற்றார் அழிபசி நீக்குதலே! அத்தனி அறத்தினைவெளிப்படுத்தவும், அந்த அறத்தில் இலட்சியம் வைக்காத அகப்புறச் சமயங்கள் அடைகின்ற அனுபவம் சிறியதே என்பதனைவெளிப்படுத்தவும், அவர்களால் முடிவாக அனுபவிக்க வேண்டியது சிவநிலை ஒன்றே என்பதனை வெளிப்படுத்தவும், அச்சிவபரம்பொருளால் அடைகின்ற முன் சாதனம் முத்தி; முடிவு நிலை சித்தி என்பதனை வெளிப்படுத்தவும், அவ்வாறே முத்தி சித்திகளை முறையே அடையப் பெற்றால், பொய் நிறைந்த பூத உடலை இடுகாட்டில் அடக்கம் செய்விக்காமல் மரணமிலாப்பெரு வாழ்வில் வாழ்ந்திட முடியும் என்பதனை வெளிப்படுத்தவும், இத்தகைய அற்புதங்களை எல்லாம் வெளிபடுத்தவும், இத்தகைய அற்புதங்களை எல்லாம் கண்டும், கேட்டும் ஒரு சிறிதும் மாற்றம் அடையாத நமது மனக்காட்டினை மேலும் வளரவிடாமல் அழித்திட வேண்டும் என்றே திருவருட்பிரகாசப் பெருமான் திருவுளங் கொண்டார்கள்.

(நாத்திகர்க்கும் அன்பு செய்தல்)

தவநெறியுந் தவப்பயனுஞ் சார்பும்சார் புணர்பொருளுஞ்
சிவனருளும் அருட்பயனுந் தேர்ந்தனர்தேர்ந் ததும்உணரா
தவநெறியிற் புக்குழன்றங் கசதிஆ டுறூம் அறிவில்
பவநெறிநாத் திகரும்உயப் பரிந்தருளின் இயல்காட்டி. (9)

உரை:

நமக்கு உண்டாகிற துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதலும், உயிர்க்குலத்திற்கு எவ்வகையிலும் துன்பம் செய்யாமல்இருத்தலுமே தவநெறி. அத்தவ நெறியைக் கடைப்பிடித்து உய்வதற்கு என்று கிடைத்த மானுட தேகமே தவப்பயன். அம்மானுட தேகத்தைக் கொண்டு நல்லோர் கூட்டுறவை பெறுதலே சார்புநிலை. அந்நல்லோர் கூட்டுறவால் உணரப்படுவதேமெய்ப்பொருள்.

அம்மெய்ப்பொருளை உணர்வதற்கு என்றே இறைவன் உடல், கருவி, உலகம், இன்பம், ஆகியவற்றை அருளியுள்ளார். அவ்விறைவனிடம் அகலாது ஒளிர்வதுவே அருள், அதனை எவ்வகை முயற்சியாலாவது நாம் அடைதல் வேண்டும், அடைந்துஎன்றும் அழியாமையைப் பெற்று ஆண்டவனாகவும் விளங்குதல் வேண்டும். அதுவே அருளின் பயன், அப்பயனை இம்மானுடப் பிறவியிலேயே அடைந்து விடுதலே நன்முயற்சி. அம்முயற்சியில் மேம்பட்டவர்களே அருளாளர்கள்.

அவர்கள் வாழ்வியலை உள்ளபடியே அறிதல் வேண்டும், அவ்வாறு அறியாமல் புல்லிய நெறியில் புகுதல் கூடாது, அத்துடன்அவர்களது வாழ்வியலை சொல் சோர்வுபடப் பேசுதல் தகாது. அப்படிப் பேசுகின்றவரே நாத்திகர், அப்படிப் பேசி பிறப்பினை அடைய இருக்கின்ற நாத்திகரும் கூட உய்ந்து மேம்பட வேண்டும், அவ்வாறு நாத்திகரிடத்தும் பரிவு காட்டிட , அன்பு காட்டிடவிழைந்தருளினார்கள் வள்ளற்பெருமான்.

(உதயம் செய்திட உவந்தமை)

சன்மார்க்கத் தவர்யாருந் தனிவிரும்பும் நிலைவிரும்பும்
பன்மார்க்கத் தவர்யாரும் பற்றும் ஒரு பற்றாகி
என்மார்க்கத் தவர்களுநா டரியபழம் பொருள்எளியேன்
துன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி. (10)

உரை:

சமய சன்மார்க்கம் - மதச் சன்மார்க்கம் - சமரச சுத்த சன்மர்க்கம் - சமரச சுத்த சத்திய சன்மர்க்கம் ஆகிய சன்மர்க்க நெறிகளில் பழகும் எல்லாரும் மிகவும் விரும்பும் நிலை ஒப்பற்ற நிலை பெற்றவர் நம் பெருமான். அத்துடன் அத்தகைய பேற்றினை நாமும் அடைந்திட நேர்ந்திடாதோ என்று விரும்புகின்ற வேறுவகை மார்க்கத்தினரும் கூடவிரும்புகின்ற தனி நிலை பெற்றவர்கள் நம் வள்ளல் பெருமான். ஆனாலும் எத்தகைய மார்க்கத்தில் பழகுவோராயினும் எய்திட இயலாத முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்நம் பெருமான்.

ஏழ்மையராகிய நாம் துன்மார்க்கத்தில் பழகும் நிலையைப் போக்கவும், உயிர் இரக்கம் ஒன்றே உய்ந்திடும் நிலை என்பதைஉருவக்கவும் நம் பெருமான் திருஅவதாரம் செய்ய உள்ளம் உவந்து அருளினார்கள்.

(வெளிப்படும் காலம் விரைந்திடல்)

பொய்யோட பொய்யோடாப் புறநிலைகள் புலம்போட
மெய்யோடா வைதிகச்செம் மொழிஒன்றான் வெய்யமல
மையோட மையோடு மனமோட மலிபிறவி
ஐயோடும் இறப்போட அருளொடு கண்ணோடி. (11)

உரை:

பொய் நெறிகள் போய் ஒழிந்திட - பொய் நெறிவிட்டு அகலாத உலகியல் நிலைகள் புலம்பி அழிந்திட - மெய் நெறிவிட்டு நீங்காதசிவ நெறி விளங்கிட - சிவ நெறி நின்று உரைத்தருளும் ஒரு சொல்லால் ஐவகை மலங்களும் அகன்றிட, அதனால் குற்றம் குறைகளிலேயே பழகிய மனநிலை மருகிக் கெட்டிட, அம்மலங்களின் பேதங்களால் பிறவிக்கு உண்டாகும் மரணம் அறவே விலகிட, நம் பெருமான் அருட்பாங்குடன் கண்ணோட்டம்(பரிவு) செய்திடும் காலம் விரைந்து வந்து கொண்டிருந்தது.

(அன்பே உருக்கொண்டிடல்)

போக்குவர வில்லது புறங்கீழ்மேல் உள்நடுசார்
பாக்கும்இடை அறஇருந்த அதிசூக்கத் தொருதனிமை
நோக்கருநோ குணர்வருளான் நோக்குறஎட் டுருவாதி
தாக்கருதாக் குறஅன்று கொண்டதொரு தகைமைஎன. (12)

உரை:

போக்கும் வரவும் இல்லாதது, உள்ளும் புறமும், கீழும் மேலும், நடுவும் பக்கமும் நீக்கமற நிறைந்தது, மிக நுண்ணிய வெளிஇயல்பு உடையது, ஒப்பற்ற தனித்தலைமை வாய்ந்தது, உள்முகத்து நோக்கி உணர்ந்து நோக்குதற்கும் அரியது, அருள் உணர்வால் நோக்கிட அகப்படுவது, அட்ட மூர்த்தமாய் நின்றது, யாதொன்றிலும் சார்பு இல்லாதது எல்லாம் வல்ல இறை, அத்தகைய எல்லாம் வல்ல இறைவன், இராமலிங்கத் திருவுருத்தாங்கிட அருள் கூர்ந்து அருளிய காலம் தழைத்திடலாயிற்று.

(அவதாரம் செய்தமை)

ஊரொடுபேர் உருஒன்றும் இல்லாத ஒப்பில்உணர்
வோர்உருஈர் உருமுக்கண் நால்இருதோள் ஐந்துமுகங்
கார்உறுகண் டமும்ஆறு கவர்சடையு மறைத்தருளி
ஏர்உறவந் தெழுந்துவோ அன்றிஇமை யவர்க்கன்று. (13)

உரை:

முன்பு ஒருமுறை விண்ணுலகத்தவரின் வாழ்க்கை நிலைகுலைய நேரிட்டது, அவரது வாழ்க்கை நிலைகுலையாமல் இருக்கமுருகப் பெருமான் எழுந்தருளினார், வேலினை ஏந்தினார், அரக்கரை வெற்றி பெற்று விண்ணுலகவர் வாழ்க்கையை நிலைப்படுத்தினார், அத்தகைய தந்தையாகிய முருகப் பெருமான்பன்னிரெண்டு தோள்களும், அருள் ஒழுகும் ஆறு முகங்களையும் மறைத்தருளி தெய்வதிரு மருதூரில் திரு அவதாரம் செய்ததுஎன வள்ளற் பெருமான் ஆங்கு அவதாரம் செய்தருளினார்கள்.

(அவதாரப் பொருண்மை)

பொன்நாடு தனைவழங்கப் போர்காட்டி எஃகேந்தி
எந்நாளும் என்ஆளும் எந்தைஆ றிருதோளும்
மன்ஆறு முகமும்ஒளித் துற்றதெனல் அலதுமற்றிங்
கென்ஆவ தன்னார்பால் இருஞ்சேய்மை தனைப்புனைந்து.   (14)

உரை:

சிவபரம் பொருளோ அன்றி முருகப் பெருமானோ அவ்வாறு உதயம் செய்தருளினார் என்று கூறாமல் வேறு வகையில்நம்பெருமானின் அவதாரத்தை அணிந்துரைக்க முடியும்?

(திருமுலைப்பால் உண்டமை)

அறுமீனார் முங்களிப்ப அனிலநாள் கொண்டதென
உருகன்னி அறுவைமீன் கொண்டருளி யுலகமெலாம்
பெறுகோல மதுகாட்டி உதயஞ்செய் பிள்ளையார்
வறியோம்பான் முளைஉண்டார் மகிழ்கிந்தனைபான் முலைஉண்டார். (15)

அனில நாள் - விசாக நட்சத்திரம், கன்னி - புரட்டாசி, அறுவைமீன் - சித்திரை நட்சத்திரம்

உரை:

கார்த்திகைப் பெண்டீர் களிப்படைய வைகாசி விசாகத்திரு நாளில் முன்பு முருகப்பெருமான் உதயம் செய்தாருளினார், அவ்வாறே பொருந்துகின்ற புரட்டாசித் திங்களில் சிறந்த சித்திரை விண்மீனில் நம் பெருமான் மானுடக் கோலம்தரித்தருளினார்கள்.

அத்துடன் மானுடக் கோலம் தரித்தருளியதை உலக மக்களுக்கு உணர்த்திக் காட்ட தெய்வத் திருமருதூரில் தற்பொழுதுஅவதாரம் செய்தருளினார்கள்.

அப்படிப் பிள்ளைப் பெருமான் அவதாரம் செய்தருளியதால் எளியவராகிய நம்மிடத்து ஏற்படும் வினை, காமம், வெகுளி, மதம், மலம், மாயை என்னும் தீய களைகளின் முளைகளை உண்டருள முற்பட்டாற்கள்,

அத்துடன் அமையாமல் உள்ளம் உவந்து புண்ணியமே பொருந்திய சின்னம்மையிடத்தும் திருமுலைப்பால்உண்டருளினார்கள்.

(திருப்பெயரின் மேன்மை)

திருமுகங்கண் டவர்யாரே ஆயினுங்கண் டளவேதீ
தொருவிமயக் கொழிந்தவர்தாஞ் செய்வனவும் முறுவனவும்
தரும்உணர்ச்சி முக்குற்றத் தடையறஆங் குறலானும்
அருள்அன்பின் புறலானும் அல்லல்எலாம் அறலானும். (16)

உரை:

தெய்வத் திருமருதூரில் உதயம் செய்தருளிய நம்பெருமானின் தெய்வ சந்நிதானத்தைக் கண்டவர் எத்தகைய தாழ்ந்தநிலையிலும் இருந்திடலாம், அத்தகையவர் நம் பெருமானின் திருச்சமுகத்தை அன்போடு கண்ட அளவில் உண்டாகும்மாற்றங்கள் இவையே!

அவ்வாறு தீமைகள் அகற்றப்படும், ஐயம், திருபு, மயக்கக் குற்றங்கள் ஒழிக்கப்படும். பிறவித் துன்பங்கள் முற்றாகப்போக்கப்படும் உடன் அன்பும், அருளும், இன்பமும் உரித்தாக்கப்படும்.

அவ்வளவோ? ஐம்பெரும் பாவங்களும் அறுக்கப்படும், சூது, வாதுகள் அனைத்தும் தொலைக்கப்படும்.

(பெரும் பெயரின் பெற்றிமை)

பாதகசூ தகங்கள்அறப் பணலானும் பாவணையாய்க்
கோதறுபா வனைக்கெட்டாக் கொள்கைத்தாய் உறலானும்
மேதகுதன் நிலைஆக்கி நிலைப்பயனாகக் குறல்ஆதி
வேதகத்தா னும்பொருள்கொள் வெளிப்படையிற் புலப்படவே. (17)

உரை:

நம் பெருமானின் அருட்பெயரோ தெய்வ பாவனைக்குரிய மறைமொழியே ஆகும். மற்றும் குற்றங் குறைகள் சற்றும் இல்லாததெய்வ பாவனைக்கும் எட்டாத கோட்பாடு உடைய மறைமொழியும் ஆகும்,

அத்தகைய தெய்வப் பெயரோ நம் பெருமான் அடைந்திட்ட பேரனுபவத்தினையும், நமக்கு உண்டாக்கித்தரும், அவ்வனுபவம்என்றும் நிலைத்து நிற்கும்படியும் செய்திடும். மேலும் பேரின்பத்தில் திளைக்கவும் செய்திடும். மேலும், பேரின்பத்தில்திளைக்கவும் செய்திடும், அத்தகைய மேன்மை தாங்கியது அவர்களின் அருட்பெயர்.

ஆதலின் வள்ளலின் அருட்பெயர் சமரச சுத்த சன்மார்க்க மெய்ப் பொருளாக ஒளிர்வது வெளிப்படை.

(திருமேனிக்கு தெய்வப் பெயர் பெற்றமை) - இராமலிங்கம்

உருநாமம் இராமலிங்கம் எனக்கொண்டார் ஓங்கருளால்
குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தார் உயநினைந்தார்
பெருநாம மந்திரத்தைப் பெற்றிஅறி யார்எல்லாம்
திருநாமம் இதுபிள்ளைத் திருநாமம் என்பாரே. (18)

உரை:

ஆதலின் நம்பெருமான் தம் திருமேனிக்கு 'இராமலிங்கம்' என்னும் தெய்வத் திருப்பெயரைத் தரித்துக் கொண்டார்கள்.

மேலே சொல்லி வந்த பயன்களை முற்றிலும் தருவதற்காகவே அவ்வாறு தரித்துக் கொண்டார்கள், திருவருட்பேறு என்றும்ஓங்கி ஒளிரும் என்பதற்காகவே அப்பெயரைத் தரித்துக் கொண்டார்கள். ஆதலின் பிறவிப் பெருங்கடலை விட்டு உயர்ந்திடவிரும்பியவர்கள் அப்பெயரே தம் சற்குருநாதரின் தெயவத் திருமந்திரமாக ஏற்றுக் கொண்டு உயர்ந்து விட்டார்கள்.

ஆனால் அந்தோ! அத்தகைய பெரும் பேற்றிற்கு உரித்தாய 'இராமலிங்கம்' என்னும் திருமந்திரத்தின் பெருமையைப் பலர்அறியாதவர்கள் இருக்கிறார்கள்.

அம்மட்டோ? "இஃது அழகிய பெயர்; குழந்தை பருவத்தே வள்ளற்பெருமானுக்குச் சூட்டப்பட்ட பெயர் என்றும் அறியாமல்உரைக்கின்றனர்".

(வள்ளல் வளர்ந்து ஓங்கியமை)

பாசம்எனக் கிடந்தேனைப் பசுஆக்கிப் பருவம்பார்த்
தாசகல உணர்த்திஅருள் ஊட்டம்மை அப்பனுமாம்
பேசரிய பெரியாரைப் பேயுணர்வேன் பேசறியேன்
தேசுவரும் அகவைசிறந் தார்எனவும் சொலஇயைந்தேன்.   (19)

உரை:

நாம் எல்லாம் முன்பின் அறியாத பெரும் அறியாமை இருளின் அகப்பட்டு மூழ்கிக் கிடந்தோம், அத்தகைய நமக்கு மானிடப்பிறவி ஈந்து, மனமாசுகளை நீக்கி, அருட்பாங்கினை ஊட்டுவிக்கும் அம்மையும் அப்பனும் வள்ளலே!

அத்தகைய பெருமானின் பெரும்புகழை வாழ்த்திட சிறுதும் முயலாமல் இருக்கின்றோம், இனியேனும் முயன்று போற்றி மேம்பாடு அடைவோம்.

(ஓதாது உணர்தல்)

மீதானத் துயர்பள்ளி மேவஎமை வைக்கும் எங்கள்
மேதாவைப் பள்ளிவிழைந் தருளிற்றென் றுரைப்பதெவன்
ஓதாமே எமைஎல்லாம் உணர்த்தும்உரு வெளியைஅச்சோ
ஓதாமே உணர்ந்ததென்பார் உணர்கிலார் ஒருவியப்போ. (20)

உரை:

அருளாம் மேல்நிலையில், பேரின்ப இருக்கையில், எம்மை எல்லாம் பொருந்தவைப்பவர் இராமலிங்கப் பெருமான்.

அத்தகைய எங்கள் சற்குருநாதர் பள்ளியில் சேர்ந்துப் படித்திட விரும்பினார் என்றும் பலரும் பலவாறாகப் பேசிப் பேசிப்பார்ப்பது எதற்காக?

எமது சற்குருநாதர் எம் போன்றவர் ஓதி உணராமல் யாவும் இயல்பாக அருளால் உணரும்படி செய்யும் மெய்ஞானத்திருமேனியர் என்பது தான் பெருவியப்பு!

அப்படி இருக்கும் போது எமது ஞானதேசிகரை ஓதாமல் யாவும் உணர்ந்திட்டார் என்கின்றார்கள் நல் உணர்வில்லாமல். இஃது ஒருவியப்போ?

(திரு ஒற்றியூர் வழிபாடு)

அவ்வயின்ஆ ருயிர்கள்முத்தி ஆரும்நெறி அறிவிப்பான்
செவ்விதின்நல் லருள்வலித்த தோதெரியேம் சிறந்துயிர்கள்
உய்வகைஉள் ளிருந்தும்ஒளித் தொற்றிநின்ற படிகாட்டத்
தெய்வஒற்றி நின்றதனைத் திருவருளால் தேற்றியதே. (21)

உரை:

பேரின்பப் பேற்றினை உயிர்க்குலம் முறையே அடைந்திடவும், அதற்கு முன்சாதனமாகிய உண்மை முத்தியை அடையும்வழிமுறைகளைத் தெரிவித்திடவும் மற்றும் அவ்வுயிர் கூட்டங்கள் சன்மார்க்க நெறியில் பழகி மேம்பட்டு உய்ந்திடவும்பெருங்கருணை உடைய வள்ளற் பெருமான், இராமலிங்கம் என்னும் திருவுருவத்தில் ஒளிந்து(ஒற்றி ஒளிந்து) வாழ்ந்துஅருளினார்கள்.

அதனை அவர்களின் திருஒற்றியூர் பாடல்களாலும், வழிபாட்டு நெறிமுறைகளாலும் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

(திருச்சமூகத்தின் மேன்மை)

அறவாழி அந்தணனாய் அருள்பழுத்த தவக்கொழுந்தெவ்
வறமாவ தெனிற்புலவீர் சந்நிதியை அடைந்துள்ளார்
அறமாவ தெல்லாமும் ஒருங்கடையப் பெற்றாரேல்
அறமாவ தெமக்கல்லால் அடிகளுக்கென் அறஞ்சொலுமே. (22)

உரை:

எல்லாம் வல்ல இராமலிங்கப் பெருமான் சத்திய தருமக் கடலினர், ஆருயிர்கள் எல்லாம் மோட்சமடையத் தண்ணருள்புரிபவர்கள். திருவருள் கனி கனிந்த ஜீவகாருண்யச் சீலத்தவத்தவர்கள்,

அவ்வகையான நம் பெருமானை எத்தகைய தரும நெறினை உடையவர்? என்று கேட்கிறார்கள், அந்தோ திருஅருட்பிரகாசவள்ளற் பெருமானின் திருச் சந்நிதயை அடைந்தவர்கள் அருள் அறம்யாவும் அடையப்பெறுவது வெளிப்படை அப்படி இருக்க, பின்பற்றபடும் அறநெறிப் பயங்கள் யாவும் நமக்கே அன்றி அருட்பிரகாசப் பெருமானுக்குச் சிறிதும் அன்று.

(தமிழ் வெள்ளம் - அருட்பிரவாகம்)

ஆணவத்தி னான்மாழாந் தறிவிழந்து வெம்பிறவிப்
பூணவத்தைப் பட்டுழலும் புன்கண்அறுத் துய்விப்பான்
மாணவத்தை அருளும்மறை விரித்தமணி வாக்கதனால்
பேணவத்தைச் சொரிதமிழ்ச்செம் பிரவாகம் பெருக்குவித்தே. (23)

உரை:

நாம் எல்லாம் ஆணவம் என்னும் மூல மலத்தினால் மயங்கி அறிவிழந்து வாழ்பவர்கள், வாட்டி வதைக்கும் பிறவிகள்பலவற்றைப் பூண்டவர்கள், அத்துடன் அலைக்கழிப்புகள் பலபட்டுத் துன்பப்படுபவர்கள்.

அத்தகைய நமது இழிநிலையைப் போக்கி மேம்படுத்த வேண்டும் என்று இரங்கி அருளினார்கள் இராமலிங்கப் பெருமான்.

வேதங்களை முன்பு விரித்து விளக்கியவர் வள்ளல், அத்தகைய அருள் மொழிகளால், யாவரும் பின்பற்றி உயர்ந்திட பாடல்செய்ய எண்ணினார்கள். கருணைக் கனிமொழிகள் என்னும் வான்முகில் பொழிகின்ற தூய தமிழ் வெள்ளத்தைத் திருவருட்பாடல்கள் மூலம் பெருக்கெடுத்து ஓடும்படி திருவுள்ளம் கொண்டிட்டார்கள் இராமலிங்கப் பெருமான்.

(கருணை கலந்திடச் செய்தல்)

சிற்றடியேம் பிழைத்தொழும்பைத் திருவுள்ளங்கொண் டகந்தை
முற்றும்ஒழித் தருள்விரவ உபாசனா முறைதெரித்தங்
கற்றம்அற அறிவுருவாய் உருவெளியாய் உருவாகிக்
குற்றம்அறுத் துணர்வூட்டிச் சேணினும்மெய்க் குறிக்கொள்ள. (24)

உரை:

சின்னஞ் சிறிது சிறு மதியாளர்கள் நாம், பிழைகள் மிகவும் மலிந்தவர்கள் நாம், அத்தகைய குறைமிகுந்த, பணிவிடை செய்யும்அடியார் கூட்டத்தை உய்வித்திட திருவுள்ளம் கொண்டிட்டார்கள் இராமலிங்கப் பெருமான்.

தன் முனைப்பு என்னும் அகந்தையை முற்றிலும் வேருடன் ஒழித்திட முதலில் எண்ணம் கொண்டார்கள். பின்பு கருணைஇன்பம் கலந்திட அன்பு கூர்ந்தார்கள், அதனால் இறைவனை வழிபட்டு உய்ந்திடும் உபாசனை முறைகளைத் தெரிவிக்கச் சித்தம்கொண்டார்கள்.

மானுடர் மரணமிலாப் பெரு வாழ்வு அடைய அன்பு கூர்ந்தார்கள். மெய்ஞ்ஞானமே திருமேனியாகவும் - அத்திருமேனியே அருள்வெளியாகவும் கலந்துகொள்ள இராமலிங்கர் என்னும் திருவுருவம் தாங்கி நம் போன்றவர் குற்றம் குறைகளை அறவே நீக்கிடக் கருணை பாலித்தார்கள்.

மனித நேய நல்லுணர்வும் - உயிர் நேய வெல்லுணர்வும் பயிலும்படி பரிந்தருளினார்கள். அத்துடன் இனி எதிர்வரும் பிறவிகள்தோறும் இம்மை, மறுமை நிலைகளினும் கூட ஆன்மநேயம் ஒன்றே ஆருயிரை எல்லம் ஆண்டவன் ஆக்குவது என்னும்நோக்கத்தைப் பின்பற்றக் கனிவு கொண்டார்கள்.

(தண்ணீர் விளக்கு எரித்தல்)

நல்லருளின் இயல்பெளியோம் பெறக்காட்ட நன்னீராற்
செல்லல்இருள் அறவிளக்குங் கெரிவித்துந் தீச்சனன
வல்லபிணி அறுவிக்கும் வகைகாட்டும் படியுடலில்
அல்லல்செயும் பிணிஅனைத்தும் அருண்மொழியா னேஅறுத்தும். (25)

உரை:

திருவருளின் இயல்பினை இன்னது என்று நாம் அறியோம். அத்தகைய திருவருள் பதிவு சிறிதும் இல்லாத ஏழை எளியவர்கள்நாம். அத்தகைய நாமும் திருவருள் பேற்றைப் பெற இயலும் என்பதை வெளிப்படுத்திக் காட்ட இராமலிங்கப் பெருமான்நினைத்திட்டார்கள்.

அதன் அடையாளமாக நற்கருங்குழி என்னும் திருத்தலத்தில் மணியம் இல்லத்தில் - அடர்ந்த அகஇருளும் புறஇருளும் அறவேநீங்கி ஒளிரத் தண்ணீரால் திருச்சந்நிதி முன்னே சத்திய ஞான விளக்கினை எரிவித்து அருளினார்கள்.

அத்துடனன்றிக் கொடிய பிறவிகள் என்னும் நோயினை நீக்கியருளும் பேற்றினை வெளிப்படுத்திக் காட்ட முதலில் நம் உடற்பிணிகள் யாவற்றையும், திருவருள் மொழி ஒன்றினாலேயே வேர் அறுத்துக் காண்பித்திட்டார்கள்.

(இதுவே எமக்குப் பாக்கியம்)

"தொடுடைய செவியன்"எனுந் தொடையால்முன் னாள்எவர்க்கும்
நாடுடைய பொருள்சுட்டி நன்றுவிளக் கியதென்ன
வீடுடைய "உலகமெலாம் உதிகின்ற" எனும் தொடையால்
பீடுடைய பொருட்சுட்டிப் பேறெமக்கின் றீதென்றும். (26)

உரை:

முன்னாளின் "தோடுடைய செவியன்" என்னும் அருள்மொழிகளால் யாவரும் பேரின்பத்தை நாடக்கூடிய மெய்ப்பொருளினைக் காட்டி நன்றாக விளக்கி அருளினார் திருஞானசம்பந்தர்,

அவ்வாறே பேரின்பத்திற்கு ஆதாரமான "உலகமெலாம் உதிக்கின்ற" என்னும் அருட்பிரகாச மாலைப் பாடலால் அன்புடையஅடியாரைத் தேடி ஆண்டவர் எழுந்தருளுவது உறுதி, என்னும் உறுதிப் பொருளினைச் சுட்டிக் காட்டியதுடன், அதனை அடைவதேநமக்குரிய சிறந்த பாக்கியம் என்றும் அருளினார் நம் பெருமான்.

(ஆயிரம் பெயர் உரைக்கின்றனர்)

வேதியாய் மலக்களிம்பை நீக்கிஎமைப் பொன்னக்கும்
வாதியாய் அருள்விழுங்கி மாயாவா தியனாகி
ஜோதியாய் விளையாடும் தோன்றலுக்கோர் ஆயிரம்பேர்
ஓதினார் உணர்வுடைய தொண்டரெலாம் ஒருசிலவர். (27)

உரை:

மண், இரும்பு, செம்பு, வெள்ளி முதலியனவற்றைப் பொன்னாக்கும், ஏம சித்தி உடையவர் நம்பெருமானார். அவ்வாறேஆணவம், கன்மம், மாயை என்னும் மலக்களிம்பினை உயிரினின்று நீங்கும்படி செய்து நம்மை எல்லம் பொன் உடம்பாக்கும்சித்தியினை உண்டாக்குபவர்கள் அருட்பிரகாசர், அவர்களோ (அருள் ஆற்றலினைத் தனக்கும், உலகத்திற்குமாக உட்கொண்டுவெளிப்படுத்தும்) அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை, சுத்தமாயை ஆகியவற்றை நீக்கிடச் செய்யும் வல்லபம் உடையதனிப்பெருங் கருணையாளர், அவரே அருட்பெருஞ்ஜோதியராகும் அருட்பிரகாசர்,

உயிர்க்குலம் யாவும் தன்போல் விளங்கத் திருவிளையாட்டினை இயற்றும் திருவருள் நம்பியும் அவர்களே ஆவார், அத்தகையவள்ளற் பெருமானுக்கு ஆயிரக்கணக்கான திருப்பெயர்களை வழங்கி நல் உணர்வு உடையவர்கள் ஆனார்கள் தொண்டர்கள்பலருள்ளே சில பேர்.

(திருஅருட்பிரகாச வள்ளலார்)

தனித்துரைத்த இராமலிங்கத் தனிமறைஆ தரித்துய்ந்தார்
இனித்த அருட் பிரகாச வள்ளல்என இனிதேத்தி
அனித்தமற்றார் சிலஅறவர் அந்தோஎன் போன்மறந்து
மனித்தன்எனக் கொண்டொழிந்தார் மலவாழ்வில் சிலமறவர். (28)

உரை:

ஈடு இணையற்று வழங்கபெறுவது "இராமலிங்கர்" என்னும் திருப்பெயராகிய தெய்வ வேதம். அத்தகைய 'இராமலிங்கர்' என்னும்திருப்பெயரை அன்புடன் போற்றி மேம்பட்டார்கள் அடியவர்கள், அத்தகைய அறப்பாங்கினரே அறிவு, மதி, மனம், வாய்இவையாவும் தித்திக்கச் செய்யும் "திருஅருட்பிரகாச வள்ளல்" என்னும் தெய்வப் பெயரை இனிய உணர்வுடன் மேலும் போற்றி, போற்றி மரணத்தை நீக்கிக் கொண்டார்கள்.

ஆனால் அந்தோ! மும்மல மயக்கத்தில் சுழலுகின்ற என்போன்ற வன் நெஞ்சர்கள் மேற்கூறிய உண்மை நிலையை மறந்து"'வள்ளலார் ஒரு மனிதர் தான்" என முடிவு செய்து அழிகின்றனரே! என்னே இழிந்தபுத்தி!

(யாருக்கு உணர்த்த இயலும்)

முலைஉண்ணி மோட்டெருமைப் பாற்கடல்மீன் எனவாழும்
நிலைஉயிர்கள் தமையுடைய பூரணத்துள் நின்றும் அந்தோ
அலைவகன்றார் இலர்துன்பத் தழுங்குகிறா ரறியாமைத்
தலைஇருந்தார் இனம்என்றால் அவர்க்குணர்த்துந் தரம்அன்றே. (29)

உரை:

உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது வள்ளற் பெருமானின் வாழ்வியல், அதனைச் சார்ந்து இயங்குபவர்கள், மாட்டின் மடியில்உள்ள பாலினை அருந்தாது, குருதியை அருந்தும் முலை உண்ணி போன்ற பாங்குடையவர்கள் ஒரு பகுதியினர், வள்ளல்இருக்கும் இடத்தில் கிடைக்கின்ற பசுமையாம், திருவருட் புல், பூண்டுகளை மேய்ந்து வயிறு நிரப்பிக்கொள்ளாமல் வேறுஇடத்தில் தெரிகின்ற பசுமையை நோக்கி நடக்கும் மேட்டு எறுமையைப் போன்றவர்கள் ஒரு பகுதியினர்,

திருஅருட்பிரகாச வள்ளலாரின் கருணை என்னும் பாற்கடலில் இருப்பதனை உணராமல் அலைகின்ற பாற்கடல் மீனைஒத்தவர்கள் ஒரு பகுதியினர், அத்தகைய பரிபூரணத் திருவருள் உடைய வள்ளற் பெருமானின் சமூகத்தில் இருந்தும் ஐயகோ!உண்மையை உணரவில்லை.

உயிரின் அலைவுகளினின்றும் விடுபடவில்லை, அத்துடன் மீளாத் துன்பத்திலும் மூழ்கித்தவிக்கின்றார்கள், இவர்கள் எல்லாம்முதன்மையான அஞ்ஞானக் கூட்டத்தினரின் இனத்தவரே ஆவார்கள், அது பொருந்தும் என்றால் அவர்களுக்கு நல்லனவற்றைஎன் போன்றவர் உரைப்பது தகுதியில்லை.

(நால்வரின் அற்புதங்கள் வள்ளலாரின் ஆற்புதங்களே)

என்பு அணங்காய்க் கற்றூணம் இருங்கடல்நா வாய்ஆகி
முன்புகராம் உண்டமகச் சின்னாட்பின் முருகாய்வந்
தன்புறநல் நரிப்பரியே ஆகவும்அந் தோஅறியார்
தன்பெருமைச் சலம்இன்றிச் சந்துரைப்பார் தடுப்பரிதே. (30)

உரை:

1 திருஞானச் சம்பந்தப் பெருமானின் வாழ்வில், திருமயிலாப்பூரில் குடத்து எலும்பு பூம்பாவை என்னும் பெண் ஆயிற்று.

2. திருநாவுக்கரசப் பெருமானின் வாழ்வில், வங்கக் கடலில் போட்டக் கருங்கல் தூண் தெப்பமாகி மிதந்தது.

3. திருவாரூர் சுந்தரர் பெருமானின் வாழ்வில், அவிநாசி என்னும் ஊரில் முன்பு முதலை உண்ட பாலகன் பின் ஒரு நாளில்அழகிய இளைஞனாக வெளிப்பட நேர்ந்தது.

4. மணிவாசப் பெருமானின் வாழ்வில் நரிகள் யாவும் பரிகள் (குதிரைகள்) ஆகி மதுரையம் பதியைக்குக் குதிரைப்படைகளாய்ஆரோகனித்து வந்து சேர்ந்தது.

அவ்வகை அற்புதங்கள் யாவும் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானின் அவ்வவ் காலங்களில் அவ்வவ் அடியார்களாகி வாழ்ந்துஅவ்வவ் அற்புதங்களைச் செய்து அருளினார்கள் என்று பெய்யாத மெய்மொழிகளைச் சொல்லுவார்கள் சில அன்பர்கள், அத்தகையோரை அப்படிச் சொல்வது கூடாது எனத் தடுத்திட இயலாது.

(பக்குவம் அடைதல் வேண்டும்)

ஆருயிர்கள் வினைக்கீடாய் அவ்வவர்கட் கறிவொழுக்கஞ்
சீருறுதெய் வம்சமயம் சிக்கெனவே யாத்தருளால்
தேரும்ஒரு சிவன்பருவம் தோற்றுவதால் திருவருளை
ஓருமதல் லால்வேறென் உரைப்பதியாம் உயர்புலவீர். (31)

உரை:

உலகத்து உயிர்கள் நல்வினைத் தீவினைக்குத் தோன்றி ஈடாக வளர்கின்றன, அதன் காரணமாக அவர் அவர்களுக்கு அறிவுஒழுக்கம் அமைகின்றன, அதனால் சிறந்த தெய்வ வழிபாடும் மற்றும் சமய வழிபாடுகளை மக்கள் பின்பற்றி மேம்படத்திருவருள் வழிமுறை செய்துள்ளது.

அவற்றின் மூலம் மெய்யறிவு விளங்கி அருளால் தெளிவு பெற எல்லாம் வல்ல இறைவனே பக்குவ காலத்தை உண்டாக்கிஅருளுகிறான். அத்தகைய அடியார்களின் பக்குவ காலம் நமக்கெல்லாம் எப்பொழுது நேருமோ என்று கருதுவதே அன்றி, பெரும்புலவராம் பெரு மக்களே! வேறு எவ்வாறு வள்ளலைப் பற்றிச் சொல்லி நிறைவு பெற முடியும்?

(துரும்பே கடவுளின் தொழில்களைச் செய்யும்)

எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அமலனார்க் கீதோர் புகழ்கொலாம் ஆடல் அரியதில் கிளந்தனன் அறியேன்
நிமலசந் நிதிநேர் துரும்பொன்றே நேர்ந்த நேர்ச்சியில் அளவறு சித்திக்
கமம்உறு புத்தி முத்தியுற் றுயிர்கள் கனிவுற இதஞ்செயும் என்றால்
சமரச வேத சன்மார்க்க சங்கச் சாதுளார் பொறுப்பர்என் பிழையே. (32)

உரை:

நால்வரின் அற்புதங்கள் வள்ளலாரின் அற்புதங்களே, சமயம், மதம், அவற்றின் தெய்வங்கள், நடைமுறைகள் யாவும்அருட்பிரகாசரின் திருவிளையாடல்களே, அப்படி யாம் சொல்லுவதால் மலம், மாயை அற்ற வள்ளலுக்கு அவை ஒருபுகழாகுமா?எண்ணிறந்த திருவிளையாடல்களை உடைய வள்ளல் பெருமானாரின் வாழ்வியலை அறியாதவனாகிய யான் சிலஅற்புதங்களை மட்டுமே எடுத்துச் சொல்லியுள்ளேன், இஃது ஒரு பெருமை அன்று,

புனிதமாகிய வள்ளல் பெருமானின் திருச் சமூகத்தைச் சிறிய துரும்பு ஒன்று சென்று அடைகின்றது, அந்த எளிய நிகழ்ச்சிஒன்றினால் அத்துரும்பு சொல்ல ஒண்ணாச் சித்திகளைப் பெருகின்றது, அருள் ஆற்றலை உடைய புத்தியைப் பெருகிறது, அத்துடன் உண்மை நல்முத்தியைப் பெருகின்றது, அவ்வாறு தான் பெற்றுக் கொண்டதோடு மட்டும் அன்றிப் பிற உயிர்களும்அவ்வாறு அடையும்படி முறை மாறாத கருணை பாலிக்கும் செயலையும் செய்கின்றது

இவ்வாறு திருஅருட்பிரகாசப் பெருமானின் திருவருட் சமூகப் பெருமையை அடக்கம் சிறிதுமின்றி உண்மையைவெளிப்படையாக எடுத்து யான் சொன்னதற்கு, சமரச வேத சன்மார்க்க சங்கத்து சாதுக்களாகிய உள்ளவர்கள் அடியேன்பிழையைப் பொறுத்தருளுதல் வேண்டும்.

(திருஅருட் செயல்)

தரவுக் கொச்சகக் கலிப்பா

எந்தைஅருட் பிரகாசன் இன்உயிர்கள் தமைத்தேற்றச்
சந்தமுற இனம்ஆடுந் தண்ணருள்ஆ டலைப்போற்றச்
சுந்தரநல் அருள்எடுத்துக் கைதருமேற் றோழுதிறைஞ்சிப்
பந்தவினைத் தொடங்குமயற் படரும்அற மொழிந்துய்வேன்.   (33)

உரை:

அருட் தந்தையாகும் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமான், மானுட உயிர்க்குலம், பாடிப் பணியும் நெறி முறையில்மேம்படுவதற்கு எண்ணம் கொண்டார்கள். அதன் காரணமாகச் செம்பொருளும் தமிழிசையும் கலந்திடும் தண்ணருள் நிறைந்ததிருஅருட் பாடல்களை எழுதிடலானார்கள், அப்படி அவ்வப்போது திருவருள் வள்ளல் பெருமானாரைப் பாடி அருளும்படிஉள்ளகத்திலிருந்து ஊக்கப்படுத்தியருளியது.

அவ்வாறு உரைத்த திருஅருட்பா பாடல்களை யானும் வணங்குதல் செய்வேன்! வாழ்த்துதல் செய்வேன்! எனது தீவினைக்கட்டுகள், மல, மாயை அலைவுகள் நீங்கும்படி அத்திருவருட் பாடல்களைப் பாடிப்பாடி மேம்படுகின்றவன் ஆவேன், அவ்வாறுசெய்தலன்றி வேறு என்ன என்போன்றவரால் செய்ய இயலும்?

(தமிழ் அமுத வெள்ளம்)

ஆயஅருள் இறைஎங்கள் அருட்பிரகாசப் பெருமான்
தூயஅரு ளால்பொழிந்த சொல்அமிழ்தாம் தமிழ்ப்பெருக்கு
நேயஅருட் பற்றாகி நிறைமனத்துப் பெரியர்க்கும்
மாயமயக் குழல்என்போன் மறவர்க்கு உள்ளுறுக்கி. (34)

உரை:

அருட்பெருஞ்ஜோதியராம் நம் அருட்பிரகாசரின் திருவாய் மொழியால் மலர்ந்தருளப் பெற்றதே திருஅருட்பாவாகிய தமிழ்அமுத வெள்ளம்,

திருஅருட்பாவாகிய தமிழ் அமுத வெள்ளம், மனித நேயமும் உயிர் நேயமும் பழகுவதற்குப் பற்றுக் கோடாகி விளங்குகிறது, மற்றும் காம வெகுளி, மயக்கங்களை நீக்கிய நிறை உள்ளத்து பெரியோர்களுக்கும், உயிரையும் உள்ளத்தையும் உருக்கும்உணர்வுடையதாகின்றது. அவ்வளவோ! மாயை வாழ்வியலும் மயக்க அறிவு நிலையிலும் சுழலுகின்ற என் போன்றவன்முறையாளர்களுக்கும் கூட உள்ளத்தை உருக்கித் தருகின்றது.

(திருஅருட்பா திருப்பெயர்)

அளவாத பேரன்பு சொரிந்தருளை விளைவித்துத்
தளவாகும் நகைக்கயற்கண் தையல்இடங் கொண்டபிரான்
வளமாகும் கழன்மலரோ டிரண்டறுத்து வாழ்விக்கும்
உளவாலே அருட்பாஎன்றோரு நாமம் பூண்டதுவே. (35)

உரை:

அளவிட முடியாத பேரன்பினைப் பொழிகின்றது திருஅருட்பா. அதனால் திருவருள் பயிரினை விளைவித்துத் தருகின்றது, முத்துப்போன்ற புன்னகை உடையவளும், கயல்மீன் போன்ற அருட்கண்களை உடையவளும் ஆகிய உமை அம்மையைஇடப்பாகத்தே கொண்ட சிவபரம் பொருளின் பேரின்ப வளம் நிறைந்த திருவடி மலர்களோடு (ஆன்மா என்னும் ஆண்டவன்என்னும்) பேதம் நீக்கி ஒன்று படுத்தி அருள்கின்றது.

அத்தகைய அருள் வாழ்வினை வழங்கும் உளவால் திருஅருட்பா என்றதொரு திருப்பெயரை வள்ளல் பெருமானின் பாடல்கள்இயல்பாகவே தரித்துக் கொண்டன.

(திருஅருட்பா என்பதன் பொருள்)

மருளாலே சிலர்என்போன் மருளாலே மயங்கிஉணர்ந்
தருளாலே உரைத்ததென அருட்பாவின் உரைகொண்டார்
தெருளாதேன் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவம்ஆக்கும்
அருளாலே உரைத்ததென அருட்பாவின் உரைகொண்டாம். (36)

உரை:

இறைவனின் திருஅருளால் பாடப் பெற்றதால் திருஅருட்பா என்னும் பெயர் பெற்றது என்னும் பொருள் கொண்டார் மயக்கஅறிவுடையோர் சிலர், அவர்தம் அறிவும் உணர்வும் மயக்கம் அடைந்தமையால் தான், அவ்வாறு பொருள் கொள்ளமுற்பட்டுவிட்டனர். அந்தோ!

பக்குவம் அடையாதவருடைய உள்ளம்தனை தெளிவித்து உடல், உள்ளம், உயிர் ஆகியவற்றையும் சிவபரம்பொருளாகவேஆக்கும், அருள் ஆற்றல் உடைமையாலே பாடப்பெற்றதே "திருஅருட்பா" - என் யாம் பொருள் கொண்டுள்ளோம்.

(தோத்திரமும் சாத்திரமும் திருஅருட்பாவே)

அத்தகைய திருஅருட்பா உபாசனைலீ லைகண்முறைமை
உய்த்தறியச் சோத்தமொடு சாத்திரமா உறுதலினால்
சுத்தமுற எப்பொருளும் விளக்கெழுவாய்த் தொல்எழுத்தை
வைத்தஎழுத் தைந்தின் உண்மை மலர்விக்கும் வாய்மையினால். (37)

உரை:

திருஅருட்பா தோத்திர நூலாகவும் விளங்குகின்றது மற்றும் சாத்திர நூலாகவும் விளங்குகின்றது,

வேத நூல்களால் கூறப்படுகின்ற உபாசனா காண்ட முறைகளையும் (கடவுளை வழிபடும் முறைகள்), ஞானக் காண்டமுறைகளையும் உணர்ந்து அறிவதற்குத் திருஅருட்பாவின் சாத்திரத் தன்மையும் தோத்திரத் தன்மையும் உதவி புரிகின்றன.

உலகில் பிறவி ஏற்றுக்கொண்ட ஆன்மா ஒன்று சுத்த தேகத்தோடு கடவுளோடு ஒன்றுபடும் தகுதியைப் படிப்படியாக, திருமுறைதிருமுறையாக, விளக்கும் உண்மை நிலைகொண்டது திருஅருட்பா, எல்லாப் பொருளையும் விளக்கும் தகுதி உடையது, தலைமையாகும் எழுவாய் எழுத்துக்களாய் அமைந்ததும், தொன்மைத் தகுதி உடையதுமான அ, இ, உ, எ, ஒ (அல்லது சிவயநம)என்னும் ஐந்து எழுத்துகளின் பொருட்பயனை உள்ளபடியே உண்டாக்கித் தரும் பெருமை உடையது திருஅருட்பா.

(திருமுறைகள் ஆறு)

அறுசமயத் துள்ளாரும் அயலாரும் அவர்அறியப்
பெறுபொருளும் அளவாத பெரும்பொருளுங் காட்டலினால்
உறுதிபெறும் அத்துவா அதன்மேலாய் உறுபொருளை
மறுவறக்காட் டுகையாலு மற்றாறு முறையாக. (38)

உரை:

பைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் ஆறுவகை அகச் சமயங்களைப் பின்பற்றுபவர்களும், அச்சமயத்திற்குப் புறம்பான பௌத்தம், சமணம், உலகாயதம், மீமாம்சம், மாயாவாதம், பஞ்சராத்திரம் என்னும் புறச்சமயங்களைப் பின்பற்றுபவர்களும்,

இவையே அல்லாத கிருஸ்துவம், முகமதியம் என்னும் சமயங்களைப் பின்பற்றுபவர்களும், உணர்ந்து அறியப் பெருகின்றமெய்பொருள் தன்மையையும் எடுத்துக்காட்டி நிற்பது திருஅருட்பா.

ஆன்ம சாதனத்திற்கு உறுதியாகப் பழகும் மந்திரம், கலை, பதம், எழுத்து, தத்துவம், புவனம், முதலிய பொருட்சிறப்புகளையும்அதற்கு அப்பால் விளங்கும் பெரும் பொருட் சிறப்புகளையும், குற்றம் குறை இல்லாமல் அனுபவித்து மேம்பட விளக்கிக்காட்டுவதால் ஆறுதிருமுறைகளாகத் திருஅருட்பா அமையப்பெற்றது.

(பிரிவும் பிரியாமையும்)

பிரிந்துபிரி யாதருளின் பெற்றிமிக்குப் பிணக்கறுமா
தெரிந்துமுறை செய்தருளுஞ் சிறப்பானே திருஅருட்பா
விரிந்துமுறை ஆறெனவே மெய்யருளின் தொடர்பாட்டால்
பரிந்தன்பர் உலகமெலாம் பழிச்சிபுகழ் நிலவியதே. (39)

உரை:

திருஅருட்பா ஆறு திருமுறைகளாகப் பிரிந்துள்ளது, ஆனாலும் அருட்பாங்கினால் பிரியாத ஒரே அருள் நூலாகி விளங்குகின்றது!முதல் திருமுறை தொடங்கி ஆறுதிருமுறை அளவும் அருள் நெறியின் வளர்ச்சியினையும் நிறைவினையும் ஒவ்வொருதிருமுறையும் முறையே படிப்படியாகத் தெரிவிக்கின்றது. அதன் காரணமாகத்தான் திருமுறைகளின் மாறுபாடு இல்லாததும், பயன்பாட்டுச் சிறப்பினால் ஒன்றுபட்டு உயர்ந்து அருள்வதும் ஆகிய தகுதியினால் ஆறு திருமுறைகளாக வள்ளல் பெருமான்திருவாய் மலர்ந்தருளினார்கள்,

ஆதலின் திருஅருட்பாவின் அருள் ஓங்கும் திருமுறைகள் ஆறாகவே ஆயிற்று. அருள் நிலையின் உண்மை மேம்பாட்டினைஅடைய விரும்புகின்ற அன்பர்கள் எல்லாம் உணர்ந்து பரிவுடன் போற்றுகின்றனர், உலக மக்கள் எல்லாம் வாழ்த்திவணங்குகின்றனர், இவ்வாறாகத் திருஅருட்பாவின் புகழ் எங்கும் பரவி விளங்கலாயிற்று.

(ஐந்து திருமுறைகள்)

பண்ணிறந்த தமிழ்வேதப் பழம்பனுவல் தொகையஅதன்சீர்
எண்ணிறந்து நின்றனபோல் எண்ணிறந்த தாங்கவற்றுள்
உண்ணிறைந்த கருணையினால் உயிர்க்குறுதி பயப்பமுனங்
கண்ணிறைந்த சுவைமருந்தாம் ஐந்துமுறை கண்டமட்டில். (40)

உரை:

தெய்வப் பண் இசைத் தகுதி பெற்ற தேவார, திருவாசகப் பழம் பாடல்கள் தொகையும், வகையும் விரிவும் கணக்கற்றிருந்தன, அவ்வாறே வள்ளல் பெருமானும் பாடிய திருஅருட்பா பாடல்கள் எண்ணிக்கை அற்றிருந்தன.

அளவு கடந்த அத்தகைய திருஅருட்பா பாடல்களுள், உயிர் கூட்டத்திற்குப் பயனாகி நிலை பேற்றினைத் தருவனவற்றைமட்டும் தொகுக்கும் படி திருவருள் ஆணை கிட்டியது. அருட்சுவை மருந்தாக, பாடிபணிந்து மகிழ்வதற்குத் தகுதியாக, ஐந்துதிருமுறைகளுக்கு உரிய பாடல்களை மட்டும் தொகுக்கும்படி திருவருள் ஆணை செய்தது.

(தில்லையில் சேமித்த திருமுறைகள் போல)

திருநெறிய தமிழாதி தெய்வமுறை பன்னொன்றும்
ஒருநெறிய மனம்வைத்தார் உருகாறும் திருத்தில்லைக்
கருநெறியங் ககல்விக்கும் கடப்பாளன் கைக்குறியாய்ப்
பெருநெறியர் சேமித்து வைத்திருந்த பெற்றிஎன. (41)

உரை:

திருநெறியத் தமிழ் தேவார, திருவாசகங்களாகும். அவை எட்டுத் திருமுறைகள் ஆகும். அவற்றை ஒருமை மனத்துடன்அன்பர்கள் ஓதி உய்ய வேண்டும் எனத் திருவருள் எண்ணிற்று. அதன் காரணமாகத் தில்லை சிதம்பரத்தில் பிறவிப் பெருங்கடலை கடத்தக்கூடிய திருமுறைகளைத் திருவறைக்குள் வைத்துத் தம் கைச் சின்னத்தையே அடையாளமாக்கிவைக்கும்படி இறைவன் கருணை கூர்ந்தான்,

அவ்வாறு அருள் நெறியில் பழகினவர்கள் தேவார திருவாசகங்களைச் சேமித்து வைத்தது போலத் திருஅருட்பாபாடல்களையும் சமரச வேத சன்மார்க்க சங்கத்தினர் ஆங்காங்கே கண்ணும் கருத்துமாக தெய்வ சிரத்தையுடன் சேமித்துவைத்திருந்தனர்.

(சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள்)

அமலம்அருள் திருஅருட்பா அருண்மரபு தனைக்குறித்துக்
கமைஉறுமா சேமித்து வைத்திருந்த தென்பர்கண்டீர்
எமைஉடையான் எல்லாமும் வல்லஅருட் பிரகாசன்
சமரசவே தச்சன்மார்க் கச்சங்கச் சாதுக்கள். (42)

உரை:

எம் தம்மை ஆளுடையார் எல்லாம் வல்ல திருவருட்பிரகாசர், அவரால் உண்டாக்கப் பட்டதே சமரச வேத சன்மார்க்க சங்கம், அச்சங்கத்தை அபிமானித்து வருகின்றவர்களே சன்மார்க்க சங்ககத்துச் சாதுக்கள். வினை, மதம், மாயை, மலம் ஆகியவற்றைஅகற்றி, நிறை அருள் பேற்றினை வழங்கிடும் ஆற்றல் உடையது திருஅருட்பா.

அத்திருஅருட்பா ஆறு திருமுறைகளாகப் பிரிந்திருந்தாலும் ஒவ்வொரு திருமுறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. அத்துடன் அன்றி அருட்பேற்றினை முறையே வழங்கி நிறைவதற்காகத்தான் அவ்வாறு தொடர்புடையதாகியது. அத்துடனன்றித் திருவருள் மரபு ஒழுங்கினையும் தன்னகத்தே கொண்டுள்ளது, ஆதலின் அச்சன்மார்க்க சாதுக்கள் குறைவற பரிசீலனை செய்து1, 2, 3, 4, 5, 6 திருமுறைகள் என்பதாகவே முறையுடன் வகுத்துத் தொகுத்து வைத்திருந்தார்கள் என்பதை உணர்வீர்களாக.

(செல்வராயரின் சிறந்த பணி)

தந்திருக்கூட் டத்துள்ளான் சதுரையான் பெரியசிவா
னந்தபுர விழைவுடையான் நஞ்செல்வ ராயன்பால்
அந்தியிளம் பிறைஅணியும் அணிமுடியை மறைத்தபிரான்
சுந்தரக்கை சாத்தியவத் திருவேடு தொகுத்தன்றே.   (43)

உரை:

சமரச வேத சன்மார்க்க சங்கத்தை அபிமானித்தவர்களுள் சிறந்த ஒருவர் சிவானந்த புரம் செல்வராயர். அவர் சன்மார்க்கசங்கத்து சாதுக்களின் திருக்கூட்டதைச் சார்ந்தவர். அருட்திரங்களும் சூழ்ந்தவர்.   பிறை சந்திரனை அழகுறத் தரித்துக்கொண்டவர் சிவபெருமான்.

அச்சிவ பெருமானாக மறைந்து எழுந்தருளி வந்து தம் தெய்வத் திருக்கரங்களால் திருஅருட்பாவை வரைந்தருளினார்கள், அத்தகைய தெய்வத் திருமுறை ஏடுகளைச் சிவானந்த புர வாழ்வுடைய செல்வராயர் முதலில் ஒன்று திரட்டித் தொகுக்கத்தொடங்கினார்கள்.

(திருஅருட்பா மகிமை)

பண்ணீர்மைச் சுவைமுதிர்ந்த திருப்பனுவல் அருட்பயனைத்
தண்ணீர்என் றோருவெண்பாச் சம்பந்தப் பிரான்வழியில்
தெண்ணீர்த்தென் கூடல்வரும் சிதம்பரமா முனிதெரித்தால்
உண்ணீர்மை ஒன்றுமிலேன் உரைப்பதுஓர் புகழாமே. (44)

உரை:

திருவருள் இசையும், திருவருள் பயனும், பேரின்பச் சுவையும் முதிர்ந்தவர் திருஞானசம்பந்தப் பெருமான். அவர் வழியில் வந்துதிருவருட்பா திருப்பாடல்களைப் பயிலுவதால் வரும் அருட்பயனை மதுரையம் பதியில் வாழ்ந்த மதுரை ஆதினத்து சிதம்பரமாமுனிவர் என்பவர் தெரிவித்து உள்ளார், "தண்ணீர் விளக்கெரித்த" என்னும் திருவெண்பாவால் அவ்வாறு தெரிவித்துள்ளார், இருள் நிறைந்த மனிதனிடத்தில் அருள் ஒளி நிறைந்த சிவம் ஓங்கும்படி அருள்புரிவதே திருஅருட்பா பாடல் என அவர்தெரிவித்துள்ளார்,

அவ்வாறு மதுரை ஆதினகர்த்தர் பாடிய பின்பு, தகுதிபாடு யாதும் இல்லாதவனாகிய யான் திருஅருட்பாவின் மகிமையைஎடுத்து உரைக்க முயன்றால் அதுவும் ஒரு புகழ் ஆகுமோ? ஆகாது; எனவே திருஅருட்பாவின் மகிமையை எளியேன் உரைக்கமுற்படவில்லை.

(ஆறாவது திருமுறை)

கலிநிலைத்துறை

ஆறா வதுமுறை ஆரிய னார்தம் அருளானே
வேறோர் சார்சே முற்றன் றெம்வினை விளைபாகம்
தேறாப் பருவந் தேர்ந்தென் றிசினோர் உதுநிற்க
வீறார் மற்றை முறைவெளி வந்தமை விரிசெய்வாம். (45)

உரை:

திருஅருட்பா ஆறு திருமுறைகளை உடையது, அதில் "ஆறாவது திருமுறை இறைவனின் திருவருளாலே தனியாகத்தொகுக்கப் பெற்றுப் பாதுகாத்திட வேண்டும், அதனைப் பின்பு அச்சு வாகனம் ஏற்றலாம்" என்று கூறி அருளினார்கள் எம் சற்குருநாதர், அவ்வாறு கூறியது எனது தீவினையின் காலமேயாகும்.

எமது பக்குவம் இல்லாத காலமே ஆகும், அருட்பக்குவம் நிறைகின்ற காலத்து ஆறாம் திருமுறையை வெளிப்படுத்தலாம் என்றுஎம் சற்குரு நாதர் அருளியதை மேற்கொண்டு அதுபற்றி ஏதும் விவரிக்காமல் நிறுத்திக்கொள்ளும் படி ஆயிற்று, அஃது அப்படிஇருக்க, அருள் ஆற்றல்கள் பொருந்திய மற்றை ஐந்து திருமுறைகள் வெளிப்பட்டமை குறித்து விளக்காமாகச் சொல்லத்தொடங்குகின்றோம்.

(திருவொற்றியூரில் திருஅருட்பா ஓத்துதல்)

தரவு கொச்சகக் கலிப்பா

ஆங்கவற்றைச் சிலர்அறிந்தார் அறியாரு மாகப்பின்
ஓங்கருளான் முத்துச்சா மிப்பெயரின் ஓர் உரவன்
தீங்ககல மன்பதைக்குத் திருஒற்றிச் சிவபெருமான்
பாங்கருட்சந் நிதிமுன்னர் பகர்ந்துபத்தி வித்தின்னே. (46)

உரை:

திருஅருட்பா ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றன, ஆறாம் திருமுறை தவிரப் பிற திருஅருட்பா பாடல்கள் ஐந்துதிருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றவற்றைச் சிலர் அறியவந்தார்கள், சிலர் அறியக்கூடவில்லை, அப்படி இருக்குத் திருவருள்கூட்டுவித்ததின் படி முத்துசாமி என்னும் நல் அறிஞர் உலக நன்மை கருதி, உலகத் துன்பங்கள் அகலுவதற்காகத் திருஒற்றியூர்தியாகராசப் பெருமான் திருவருட் சந்நிதி முன்பு முறையாகப் பத்தி சிரத்தையால் ஓதி உயர்ந்தார்கள்.

(யார் பாடியது எனத் தேடியது)

அப்பத்தி அன்புமுளைச் சிறிதுபூத் தருள்விரவ
மெய்ப்பத்தி யில்சிலவர் விமலஅருட் பாவிழைந்து
செப்புற்றார் யாவர்எனத் தேடுறுதேட் டங்கண்டு
துப்பற்றார் சிலர்எழுதித் துரிசிற்றார் பரிசுற்றார். (47)

உரை:

அதன்பின்பு, திருஅருட்பாவின் மீது பக்திகொண்டவர்கள் பலர். அவர்கள் உள்ளத்திலோ அன்பு முளைக்கத் தொடங்கியது, அருள்பூத்து மணம் பரவத் தொடங்கியது, அதனால் உண்மை பக்தி கொண்ட சிலர் அத்திருஅருட்பாவினை ஓதி மேம்பட விருப்பம்கொண்டார்கள், திருஅருட்பாவினை யார் பாடி அருளியது? எனப் பேசத் தொடங்கினார்கள், திருஅருட்பா எங்கே கிடைக்கும்?எனத் தேடிப்பார்க்கும் ஆர்வம் கொண்டார்கள், காதில் விழுந்த அளவிற்குத் திருஅருட்பாவை எழுதினார்கள், அதுவும் குற்றம்குறையாகவும், தப்பும் தவறுமுடைய தன்மையோடும் எழுதினார்கள்.

(திருஅருட்பா அச்சேறுதல்)

ஈதுணர்ந்தங் கென்போல்வார் சிற்சிலவர் பொருள்விழைவால்
கோதுறுவார் மரபிறந்து கோள்விராஅய்ச் சிறிதச்சில்
போதுறத்தாம் பொறித்தலும்அ பெற்றிஉணர்ந் தாங்குரைத்த
தீதில்திரு அருட்செல்வ ராயப்பேர் சேமத்தான். (48)

உரை:

வள்ளற் பெருமானே திருஅருட்பா பாடல்கள் பாடியருளியது என உணர்ந்தார்கள் சிலர், என்போன்ற சிலர் பொருள் ஆதாயம்கருதி அச்சில் ஏற்றத் தொடங்கினார்கள், அவர்களோ குற்றம் குறையுள்ள அறிவினர், முதல் ஐந்து திருமுறையின் திருஅருள் மரபுயாதும் அறியாதவர்கள், அதனால் திருமுறை மாற்றி அச்சேற்றினார்கள். இருப்பதையும் இல்லாததையும் அச்சேற்றினார்கள்,

ஐந்து திருமுறைகளில் ஆங்குள்ளவற்றையும் ஈங்குள்ள சிலவற்றையும் அச்சேற்றினார்கள், சமரச சன்மார்க்க சங்கத்துச்சாதுக்கள் உள்ளம் பேதலிக்கும்படி அச்சிட்டார்கள், அதனை உணர்ந்து வருந்தி உரைத்தார் தீதிலாதவரும், திருஅருட்பேற்றிற்குஉரியவரும், திருஅருட்பாவை பாதுகாத்து வைத்திருந்தவரும் ஆகிய சிவானந்த புரம் செல்வராயர் என்பவர்.

(இறுக்கம் இரத்தனம்)

மறுக்கத்தான் அமரர்எலாம் நொந்தழுலும் வந்தழலும்
பொறுக்கத்தான் அருநஞ்சம் அமுதுண்டு பொன்மிடறுங்
கறுக்கத்தான் உளம்வைத்த கண்ணாளன் கழற்கன்பான்
இறுக்கத்தான் கற்றவன்ஓர் இரத்தினம்எனப் பானோடு. (49)

உரை:

பிறர் திருஅருட்பாவை தவறாக அச்சிட்டதைக் கண்ட சமரசவேத சன்மார்க்க சங்கத்து அன்பர்கள் எல்லாம் அவ்வாறுஅச்சிட்டதைக் மறுப்பு கூறி, மனம் நொந்து அழுதிட்டார்கள். பலரும் வந்து வந்து சொல்லி கண்ணீர் சிந்தினார்கள், உலகஉயிர்களை எல்லாம் ஈடுஏற்றம் செய்ய வேண்டும் என்று கருதி கடல் நஞ்சினையே அமுதமாக உண்டவர் நம் கண்ணுதலாம்சிவபெருமான், அச்சிவபெருமானின் சிவநெறியின் பால் நீங்காத நேயமும், சிவபெருமானின் திருவடியின் பால் நீங்காத அன்பும்உடையவர் ஒருவர் அவரே இறுக்கம் என்னும் ஊரை உடையவர், இரத்தினம் என்னும் பெயரை உடையவர்.

(கூட்டுறவின் உறுதிப்பாடு)

கலி நிலைத்துறை

வில்லா ருஞ்சிறு பிள்ளை மதிப்பிஞ் சணிவேணிப்
பொல்லார் மன்றா டியசே வடிசேர் புலமிக்கான்
நல்லார் நம்பெரு மக்கட் கினியா னவையில்லான்
மல்லார் திந்தோள் நம்பி அவன்துணை வலியாலே. (50)

உரை:

இமயமலையை வில்லாக வளைத்தவனும், சின்னஞ்சிறிய இளம்பிறையைத் திருமுடியில் தரித்தவனும், புன்மைகள் நீங்கியபொன்னம்பலத்தில் ஆனந்த நடனம் இடுபவனும் தில்லை கூத்தன் ஆவான், அத்தில்லை கூத்தனின் திருஞானம் மிகுந்தவனும், சமரச வேத சன்மார்க்க சங்கத்தார்க்கு இனிமையானவனும், குற்றம், குறை இல்லாவனும், உறுதி பூண்ட திரண்டத் தோள்களைஉடையவனும், ஆடவருள் சிறந்த அண்ணலாகிய அந்த இரத்தினம் என்பானது கூட்டுறவு சன்மார்க்க சங்கத்தவருக்குஉறுதியாகக் கிடைத்தது.

(தடுக்க எழுந்தனர்)

தரவு கொச்சகக் கலிப்பா

சிவநேசச் சிவராஜ யோகியர்க்காம் திருச்சிறந்த
தவநேசன் வாசுதேவப் பெயர்கொள் தகுதியனே
பவநேச மற்றார்கள் பற்றுபசு பதிக்கினிய
நவநேசன் ஐயாசாமிப் பெயரோ னேஇருவர். (51)

உரை:

சிவநேயமும், சிவயோகமும் சிறந்த திருவாளராகிய சிவராஜ யோகத்தில் தலைநின்ற பெரியவர் வாசுதேவன் என்னும் பெயர் கொண்ட தகுதியாளர், உயிர் நேயமுடைய அவரும், மற்றும் நவ நிலைகளில் அனுபவமிக்க ஐயாசாமி என்பவரும், வள்ளலின்சம்மதமின்றித் திருஅருட்பா அச்சேற்றுத்தைக் கண்டு கலங்கினார்கள்

(வள்ளலின் திருச்சமூகத்திற்கு விண்ணப்பம்)

தங்களைமுன் னிட்டவரைத் தடுத்ததன்றி அறம்நேக்கி
அங்குசிலர் பொருள்ஈந்தும் அவர்தனியே கரந்துமீட்
டுங்கச்சில் இட்டுவெளி யாக்குறக்கண் டுள்ளுடைந்து
மங்கலஞ்செய் நாயகர்க்கு வழிமொழிவிண் ணப்பித்து. (52)

உரை:

மேலே கூறிய வாசுதேவன், ஐயாசாமி என்னும் இவர்களை முன் அனுப்பித் திருஅருட்பாவை மரபுமாறி, முறைமாறி, அச்சிடவேண்டாம் என்று அச்சேற்றியவர்களுக்குச் சன்மார்க்க சங்கத்தார்கள் அறிவுறுத்தினார்கள், அத்துடன், பிறகு யாவரும்அச்சேற்றிடாதபடி கண்காணித்து வந்தார்கள், இந்நிலையில் சிலர் மூலப்பிரதி உள்ளவர்களுக்கும் அச்சிட்டவர்களுக்கும் பணம்தந்து முன் போல மரபு மாறி, முறை மாறி அச்சிடத்தொடங்கினார்கள், அவ்வாறு திருஅருட்பா திருமுறைகள் முறைமாறிஅச்சில் வருவது கண்டு மீண்டும் உள்ளம் உடைந்தார்கள் சன்மார்க்க சங்கத்து அன்பர்கள், முடிவாகத் திருவருள் மங்கல நாண்சூட்டி அடியார்களைக் காப்பற்றும் நாயகனாம் வள்ளற் பெருமானிக்கு இயல்பாகவும் முறையாகவும் எடுத்துக்கூறிமுறையிட்டுக் கொண்டார்கள்.

(அன்பர் இரத்தினம் முயற்சி)

முறையுளித்தாம் அச்சியற்ற இரத்தினப்பேர் முதுக்குறைவன்
இறைஅருளுக் கேற்றிரப்ப எந்தைஅருள் இசைவின்றிக்
குறைஇரந்தார் குறைக்கிரங்குங் கொள்கைகண்ட வக்குணவான்
மிறைஉள்ளார் மிகைஅறுக்க மேற்கொண்டங் குசாவுதலும். (53)

உரை:

சன்மார்க்க மரபில் முறையாக விளங்கி ஓங்கும் அன்பர் இரத்தினம், அப்பேரறிஞர், திருஅருட்பா பாடல்கள் முறைப்படிஅச்சேற்ற எல்லாம் வல்ல வள்ளற் பெருமானாரின் அருளை வேண்டி நின்றார்கள், அப்படியும் எமது தந்தையாராகியதிருஅருட்பிரகாச பெருமானார் சிறிதும் இசைவு அளிக்கவில்லை, கடவுள் திருஅருளால் கிடைக்கப் பெற்ற பணம் முதலியபொருட் கருவிகளை எவ்வகை ஆதரவும் இல்லத ஏழையரின் பசி நீக்குதலுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதனால் அப்படிஇசைவு தராமல் இருந்தருளினார்கள்.

ஆனாலும் குறைகளைச் சொல்கின்றவர்களின் குறைகளைப் போக்கும் கொள்கையும் குணமும் உடையவர்கள் வள்ளற்பெருமான், அத்தகைய நம் பெருமான் முறையற்றவர்களின் முறையற்ற அச்சேற்றத்தைச் தடுக்க அப்போது ஓரளவு கருணைகூர்ந்தார்கள்.

(வைப்பு நிதி)

பல்லவகோ திரத்துவந்த சபாபதிமால் பயந்தருளும்
நல்லவன்எம் உயிர்த்துணையான் நாயனார் கழல்மறவாச்
செல்வமிகு காரணத்தா னுஞ்செல்வ ராயன் என
வல்லபடி முன்நுவன்ற வண்மைப்பேர்ச் சேமநிதி. (54)

உரை:

பல்லவ கோத்திரத்தில் வந்தவர் சபாபதி என்னும் பெரியவர், அவர் ஈன்றருளிய நல்லவரும், எம் உயிர் துணையாகவிளங்குபவரும் வள்ளல் பெருமானின் திருவடிகளை மறவாது அருட்செல்வம் மிகுத்துக் கொள்ளும் நன்முயற்சிஉடையவருமே சிவானந்தபுரம் செல்வராயர். அவர் முன்பு சொல்லியபடி வள்ளண்மை பூண்ட உள்ளத்தினராய்த் திருவருட்பாப்பாடல்களைத் தொகுத்து வைக்கும் வைப்பு நிதியாக விளங்கத் தொடங்கினார்.

(தொழுவூர் வேலாயுத முதலியார்)

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்அடைந்தார் தானாகத் தாங்குபெருந் தயாளன் சற்குணங்கள் எல்லாம்
பொன்னுருஒன் றெடுத்ததெனும் புகழாளி உயிரும்ஒரு பொருள்அன் றாக
என்னவர்க்கும் ஈகைபயிற் றெடுத்தல்உணர் வினுக்குறையுள் யார்க்குந் தந்த
முன்னம்உணர்ந் துபகரிக்கு முதலியப்பா அண்ணல்அருண் முளைநன் மீளி. (55)

உரை:

தன்னிடம் சேர்ந்தவர்களைத் தானாகவே கருதி தாங்குகின்ற பெரும் தயவுள்ளவர். சற்குணங்கள் யாவும் திரண்டு ஒருபொன்வடிவம் எடுத்தது போல் விளங்குபவர், அருட்புகழுக்கு உரியவர், உயிரையும் ஒரு பொருளாகக் கருதாதவர், எத்தகையவர்களுக்கும் ஈதல், இசைபட வாழ்தல் என்னும் கோட்பாட்டினைப் பயிற்றுபவர், ஆடவருள் சிறந்தவர், ஜீவகாருண்யநல் உணர்விற்கு இருப்பிடமானவர், எத்தகையவர்க்கும் அவர்தம் நோக்கம் உணர்ந்து உபசரிக்கும் தன்மையாளர்முதலியாரப்பா என்பவர், அவரே திருஅருட்பிரகாச அண்ணலாருக்கு அருள் மரபின்படி முளைத்து எழுந்த முதல் சீடர் ஆவார்.

(புதுவை வேலு)

தரவு கொச்சகக் கலிப்பா

விற்புருவம் நெறித்தருளி வீறடங்கப் புரம்பொடித்த
பொற்புருவச் சிலையாளி புண்ணியநீற் றன்புடையான்
அற்புருவன் அருட்பிரகா சப்பெருமான் திருவருட்குச்
சொற்புதுவை வேலையன் றனைத்துணையாத் துணைகொண்டு. (56)

உரை:

வில் போன்று புருவங்களை நெரித்து, திரிபுராந்தகர்களின் மும்மலச் செருக்கு அடங்கத் திரிபுரங்களைப் பொடியாக்கி, பொன்மலையையே வில்லாக்கிய சிவபெருமானின் புண்ணியமாகும் நெறியோ திருநீற்று நெறி, அத்திருநீற்று நெறிக்குஅன்புடையவர் புதுவை வேலு முதலியார் என்பவர், அன்புருவமான திருஅருட்பிரகாசப் பெருமானின் திருவருளைதுணையாகக் கொண்டும் புகழ்மிகும் புதுச்சேரி அவ்வேலையரின் உதவியைத் துணையாகக் கொண்டும் திருஅருட்பா அச்சிடும்பணி தொடங்கலாயின.

(திருஅருட்பா முதல் பதிப்பு)

வேண்டுவன உபகரிக்கக் கலிநாற்பத் தொன்பதுநூற் றறுபான் மேலெட்
டாண்டெழுதா வெழுத்தேற்றி நான்குமுறை அரசறிய வெளியிட் டியார்க்கும்
பூண்டெழுபேர் இன்பமகிழ் வதுபெருகப் பணிபுரியும் பெற்றி யானே
காண்தகுசீர்த் தேவநா யகன் அருளும் இரத்தினப்போர்க் காத்திட்டானே. (57)

உரை:

திருஅருட்பா அச்சிடும் பணிக்கு வேண்டியவற்றைப் புதுவை வேலு என்பவர் உபகரிக்கத் தொடங்கினார், அதன் காரணமாகக்கலியுகாதி ஆண்டு 4968ல் அச்சிட்டு திருஅருட்பா நான்கு திருமுறைகள் அரசாங்கத்தினர் அறியுமாறு வெளியிடப் பெற்றது. அதனைக் கண்ட யாவர்க்கும் பேரின்பமாம் மகிழ்ச்சியது பொங்கிப் பெருகியது, சன்மார்க்கப் பணியையே தன் மூச்சாகக் கொண்டதன்மையால் இறுக்கம். இரத்தினம் என்னும் பெரும் பெயரை திருஅருட்பா வெளியீட்டினால் காத்துக்கொள்ளும் நற் காரியத்தைஅவர் செய்திட்டார்.

(திருஅருட்பா எனும் தரு தழைக்கத் தொடங்கியது)

மிக்கமறை ஏத்துமுக்கண் வித்தகனார் திருமயிலைத்
தொக்கஇளங் கோக்குடியில் வருந்தூயன் குணநிதியான்
சிக்கிட்டி அருள்சோம சுந்தரன்செய் தாளாண்மை
தக்குலகு திருஅருட்பா இனிதுபெறத் தழைத்தன்றே. (58)

உரை:

சுத்த வேதங்களால் போற்றப் பெறுபவரும் மூன்று கண்களையும் அருள் ஆற்றலும் உடையவருமே சிவபெருமான், அவரதுதிருக்கோயில் ஓங்கி விளங்கும் தலம் திருமயிலாப்பூர். அம்மயிலாபூரில் குடிச்சிறப்பாலும், குணச்சிறப்பாலும், கொள்கைச்சிறப்பாலும், செல்வச் சிறப்பாலும் சிறந்து விளங்கியவர் சிக்கிட்டி செட்டியார் என்பவர். அவர் கருணை கூர்ந்து ஈன்றருளியவரேசோமசுந்தரம் என்பவர், அவரே திருஅருட்பா பதிப்பிற்கான பெரும் பொருள் உதவி செய்யலானார். அதன் காரணமாகப்பூவுலகினிடையில் திருஅருட்பா என்னும் கற்பகத் தரு பேரின்பக் கனிகளைத் தர என்றே வளர்ந்து செழித்துத் தழைக்கத்தொடங்கியது.

(சீனிவாச வரதர்)

நேசம் எல்லாம் உடையார்க்காய் உள்ளம் உருகி நிறைஅழிந்த
தேசன்எங்கள் சடகோபன் தெய்வத்தமிழோர் வடிவாகிப்
பாசங்கழன்று வடகலைப்பாற் கடற்கோர் பஃறியாம்சீனி
வாசவரதப் பெயர்கொள்அறங் கரையும்நாவின் மறைக்கொழுந்து. (59)

உரை:

பக்திப் பெருக்கு உடையவர்களோடு கூடி உள்ளம் உருகுபவர் குறை அழிகின்றவர், நன்மை எல்லாம் உடைய நம் ஆழ்வாரின்திருவாய்மொழியாம் தெய்வத் தமிழே ஓர் உருவானவர், பந்த பாசங்களில் இருந்து விளகியவர், வடகலை என்னும் வைணவப்பாற்கடலுக்கு ஒரு தொப்பமாய் விளங்குபவர் கொந்தமூர் சீனிவாச வரதர் என்னும் எழிற்பெயர் பூண்டவர், அவர் அறங்களைஎடுத்துக்கூறும் செவ்விய நாவினை உடையவர், வேதத் தளிராகி விளங்குபவர், அவரும் வள்ளலின் மாணாக்கராய் விளங்கித்திருஅருட்பா வெளியீட்டுப்பணியில் பங்கு பெற்றார்.

(வீராசாமி என்னும் தவக்கொழுந்து)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வேதனார் மாலார் காணரும் முக்கண் விகிர்தனார் விளம்பரு ஞான
போதனார் அளவாப் புனிதனார் நாயேன் புழுத்தலைக் கினிதிரு தியசெம்
பாதனார் அன்பர் உளம்பிரி யாத பரமனார் அருட்பிர காச
நாதனார் கருணைக் குறையுளார் வீரா சாமிப்பேர் நற்றவக் கொழுந்து. (60)

உரை:

நான் முகனும் திருமாலும் காணமுடியாத முக்கண்களை உடைய சிவபெருமானார்; எடுத்துச் சொல்ல முடியாத மெய்ஞ்ஞானமே ஒரு திருவடிவானவர்; அளவிட முடியாத புனித புண்ணியர், நாயேனுடைய புழுத்தலையின் மீது செவ்விய திருவடிகளை இனிது சூட்டியவர்; அன்பர்களின் உள்ளத்தின்று ஒரு நொடியும் பிரியாத அருட்ஜோதி தெய்வமானவர்; அவரே அருட்பிரகாசநாயகனார், அவரது திருவருளுக்கு உறைவிடமானவர், வீராசாமி என்னும் நற்பெயருக்கு உரியவர், அவரும் வள்ளலின்மாணவராகி நல்ல தவக்கொழுந்தாய் விளங்கி அச்சுப்பணியில் ஈடுபட்டார்.

(தேவநாதரும் அப்பாசாமியாரும்)

தவம்அர சிருக்கும் அத்தாணி நெஞ்சர் தகும்உயிர் கின்புசெய் தக்க
சிவம்உணர் பெரியர் அருட்பிரகாச தேசனார் திருவடிக் கன்பர்
அவம்அறு தேவ நாயகன் அப்பா சாமியே ஆதிஆ ரியர்கள்
நவம்உறு சென்னைக் கூடன்மற் றுள்ள நற்றலந் தொறுநங்கள் நாதன். (61)

உரை:

தனக்கு நேரிட்ட துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுபவர், எந்த ஓர் உயிருக்கும் எள்ளளவும் துன்பம் செய்யாதவர், அத்தகையநல் தவசிங்காசனத்து அரசு வீற்றிருக்கும் உள்ளத்தை உடையவர், பொருந்துகின்ற உயிர்தொகுதிக்கு இன்பமே செய்யத்தகுந்தவர், சிவபரம் பொருளை உணர்ந்து அவராகிய பெரியவர்தான் திருஅருட்பிரகாசர் என்னும் அருட்புகழை உடைய வள்ளற்பெருமானார், அவர்தம் திருவடிகளுக்கு மாறாத அன்புடையவர்களாகி அவலக் கவலைகளை நீக்கியவர்கள் தேவநாயகர், அப்பாசாமியார் முதலிய உயிர்நேய உணர்வாளர்கள். மேலும் அவர்கள் அருட்புதுமை பெறத்தக்க சென்னப்பட்டிணம், மதுரையம்பதி மற்றும் உள்ள நல்லிடங்கள் தோறும் வாழ்கின்றவர்கள் ஆவார்கள், அவர்களும் அச்சிடும் பணிக்கு ஆதரவு நல்கினார்கள்.

(திருஅருட்பா வரலாறு)

பொன்பழித் தலர்செந் தாமரை குழைத்த பூங்கழற் கன்பராய் உள்ளார்
தன்பொரூஉஞ் சீர்த்தச் சமரச வேத சன்மார்க்கத் தனிப்பெருஞ்சங்கத்
தென்பவம் அறுக்கும் எம்பெரு மக்கள்இன் செவிக்களம் புகுந் தெளியேன்
துன்பறச் சென்னி அரசிருந் தன்றித் தூயநல் லருள்வர லாறே. (62)

உரை:

மாற்று உயர்ந்தப் பொன்னை ஒழித்ததும் மலர்ந்த செந்தாமரையின் வளன் பொருந்தியதுமான வள்ளலின் திருவடிகளுக்குஅன்பர்களாய் பலர் உள்ளனர், அத்தகைய அன்பர்களின் பெரும் புகழுக்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை, அன்னவர்யாவரும் ஒன்று கூடியதே சமரச வேத சன்மார்க்கத் தனிப்பெரும் சங்கம், என்னுடைய பிறவிப் பிணியை அறுக்கக் கூடியஅத்தகைய சன்மார்க்க சங்கத்துப் பெரியோர்களின் செவி என்னும் களத்தில் புகுந்து ஒளிர்வதுதான் இத்திருஅருட்பா வரலாறு.

(திருவருளால் வகுக்கப்பெற்ற திருமுறைகள்)

தரவு கொச்சகக் கலிப்பா

நடந்தசெயல் அருள்காட்ட நான்வகுத்த படியன்றி
மடம்படும்என் அறிவானே வகுத்ததன்றாம் ஆதலினால்
இடம்படுதம் உணர்உணர்வின் எம்பெருமக் கள்சவையும்
உடம்படும்புன் மொழிஎள்ளா துலகமெலா மோங்குகவே. (63)

உரை:

திருஅருட்பா பாடல்கள தொகுக்கப் பெற்றதும், ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றதும், அத்திருஅருட்பா பாடல்கள் நான்குதிருமுறைகளாக அச்சேற்றியதும், வேலாயுதனாகிய என்னால் செய்யப் பெற்றவை அல்ல. மேற்கூறிய செயல்கள் யாவும்திருவருள் முன்நின்று வழிகாட்ட வகுக்கப் பெற்றவையே ஆகும், அறியாமையால் அழுந்தும் எமது புல்அறிவால் இவைவகுக்கப் பெற்றன அல்ல, ஆதலினால் சன்மார்க்க சங்கத்தில் இடம் பெற்று மனித நேய உணர்விலும் உயிர் நேய உணர்விலும்ஓங்கி வளரும் எமது பெருமக்களாம் சன்மார்க்க சங்கத்தவர்கள் யாவரும் வள்ளலின் ஆணைக்கு உட்பட்டு பாடியஇத்திருஅருட்பா வரலாற்றினை இகழாது ஏற்பார்களாக! இத்திருஅருட்பா வரலாறு உலகம் எங்கும் ஒளிர்ந்து ஓங்குவதாகுக!

அருட்பெருஞ்ஜோதி

முற்றிற்று.